விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 18 சனிக்கிழமை (02.01.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 014

அரியாலைப் பகுதியில்

## சிசு படுகொலை பேர்த்தியார் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் பச்சிளம் குழந்தையை கொலை செய்ததாக பேர்த்தியார் ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியுள்ள நிலை 19



## விவசாயத்துக்கே அரசாங்கம் முன்னுரிமை

ஜனாதிபதி உறுதி
12ஆம் பக்கம் பார்க்க

மருதனார்மடம் கொத்தணி

## தெல்லிப்பழையில் இருவருக்கு கொரோனா உறுதி

(யாழ்ப்பாணம்)
மருதனார்மடம் கொத்தணியில் மேலும் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகா 19

## கொரோனாவை கட்டுப்படுத்த 25 மாவட்டங்களுக்கு இராணுவ அதிகாரிகள் நியமனம்

09ஆம் பக்கம் பார்க்க

## அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி

மதத் தலைவர்களுடன் உறவுகள் சந்திப்பு
08ஆம் பக்கம் பார்க்க

கடலுக்குச் செல்வோருக்கும்

# கொரோனா வைரஸ் பரவும் அபாயம்

### கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை எச்சரிக்கை

(கொழும்பு)
ஆறுகள், நீரோடைகள் கடலில் கலப்பதால், கொரோனா வைரஸ் தொற்றும் அபாய நிலை அதிகரிக்கலாம் என கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

நாளொன்றுக்கு 50 ஆயிரத்துக்கும் அதிகமான முகக் கவசங்கள் கடலில் கலப்பதாகத் தெரிவித்துள்ள அதிகார சபை, இதனால் பொழுது போக்காகக் கடலுக்குச் செல்வோருக்கும் கொரோனா தொற்று ஏற்படும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் எச்சரித்துள்ளது.

(19ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் வாள்களுடன் புகுந்த முகமூடிக் கொள்ளையர்கள்

### பொதுமக்களால் மடக்கிப் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் வீடு புகுந்து திருட முற்பட்ட முகமூடிக் கொள்ளையர்கள் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு, தாக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.
கொள்ளையர்களின் வாள்வெட்டில் 19

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி

### வவுனியாவில் இன்று கவனயீர்ப்பு

(வவுனியா)
அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் வவுனியா பொது வைத்தியசாலை சுற்றுவட் 19

புத்தாண்டு தினத்திலும்

## கொரோனாவுக்கு மேலும் நால்வர் பலி

### உயிரிழப்பு 208ஆக உயர்வு

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா வால் பாதிக்கப்பட்ட நிலையில் மேலும் 4 19

## தடுப்பூசிகள் மூலம் கொரோனா பேரவலத்திலிருந்து மீள முடியும்

### வட மாகாண சுகாதாரப் பணிப்பாளர் கேதீஸ்வரன் நம்பிக்கை வெளியீடு



(யாழ்ப்பாணம்)
"கோவிட் - 19 தொற்று நோயால் இருண்ட பயணத்தில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தடுப்பூசிகள் ஒளிக்கீற்றுக்களாக தெரிகின்றன.
இந்தப் பேரவலத்திலிருந்து இவை மக்களை 19



## இராணுவம் போர்க்குற்றம் எதுவும் செய்யவில்லை

### கமால் குணரத்ன

(கொழும்பு)
இலங்கை இராணுவம் படுகொலைகளில் ஈடுபடவில்லை. போர்க்குற்றங்களும் இழைக்கவில்லை.
எனவே எதற்கும் அஞ்ச மாட் 19

## சங்கிலி அறுத்தவர் வவுனியாவில் கைது

(வவுனியா)
வவுனியா வைரவபுளியங்குளம் வீதியால் சென்ற பெண்ணி 19

## +555 நாட்டில் நேற்று தொற்று கண்டறிவு

### 43 ஆயிரத்தை தாண்டிய பாதிப்பு

(கொழும்பு)
நாட்டில் நேற்று மட்டும் +555 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.
இந்நிலையில், கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 43 ஆயிரத்து 19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 81 ஆவது அகவை தின வாழ்த்து



வாழ்நாள் பேராசிரியர்

**ஸ்ரீமான் அருணாசலம் சண்முகதாஸ்** அவர்கள்

(02.01.2021)

ஆழ்ந்தகன்ற
நுண்மான் நூலை
புலம்மிக்க
மொழியியற் பேராசான்
சிறந்த தமிழ் பொக்கிஷம்
நனி சிறந்து வாழ்க
பல்லாண்டுகள்.

Best Wishes

உலகாண்ட நாயகியாய் காட்சி தந்தாய்
உக்கிரமாய் தாண்டவமும் ஆடிக்கொண்டாய்
சிலகாலம் சிவன் நோக்கி நிட்டை கொண்டாய்
சிட்டர்களுக்கு அப்பகரம் நீட்டி நின்றாய்
பலவாய தருமங்கள் போதித்தாண்டாய்
பக்குவமாய் என் பாசவினை நீக்கினாய்
நலம் சேரும் சண்முகதாஸ் அமுதமாய் ஒன்றாய் (81)
அருளோடு பொருள் கொண்டு ஆண்டாயே...

வாழ்த்தும் : அன்னையின் அடி கீழ்
சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்
ஆதீனகர்த்தா
நெல்லண்டை பத்திரகாளியம்மன் கோவில்
இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளியம்மன்
வடபத்திரகாளியம்மன் தேவஸ்தானம்
தும்பளை, பருத்தித்துறை.

077 443 1869
076 641 8771

(C-1080)


புதிய **நாவலர்** கல்வி நிலையம்

ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.

தரம் 6 முதல் O/L வரை

புதிய கல்வியாண்டு - 2021

Zoom வகுப்புகள் மூலம்

ஆரம்பம் 04 ஜனவரி திங்கள்

◆ பெற்றோர் நேரில் வருகைதந்து கட்டணத்தைச் செலுத்தி நேர அட்டவணையைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

புதிய அனுமதிகள் வழங்கப்படும்.

☎ 077 459 8440

(5150)



MoneyGram WESTERN UNION WU

Ria

Moving Money for better

உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...

SRI MURUGAN

TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
#303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com

(C-737)



விற்பனைக்கு

சனல் பால் ஆடு குட்டியுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு

077 663 1742

(C-1079)


# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை
புஸ்பரூபி தங்கவேல் அவர்களின்
அன்புத் தந்தை

அமரர்

**கதிரவேல் தங்கவேல்**

(ஓடக்கரை வீதி, பருத்தித்துறை)



தோற்றம் 09.09.1957

மறைவு 31.12.2020

மீளாத்துயில் கொண்டு - எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரே!
கலையாத நினைவுகளுடன்
உதிரும் எம் கண்ணீர் அஞ்சலி!

அன்னாரின் பிரிவால் துயரில் உள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
கிளி / முருகானந்தா கல்லூரி
முரசுமோட்டை, கிளிநொச்சி.

(C-1077)

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 24 . 09 . 1980

இறப்பு 02 . 01 . 2016

அமரர்

**தீபா கெங்கேஸ்வரன்**

அன்பின் ஆலயமாய்
அரவணைப்பில் அன்னையாய்
குடும்பத்தின் தலைமகளாய்
குவலயத்தின் நன்மகளாய்
தமக்கென வாழாது
எமக்கென வாழ்ந்து – என்றும்
நல்வழி காட்டினீர்
ஐந்து ஆண்டுகள் சென்றாலும்
நாம் மறவோம் எம் தெய்வத்தை...


(C-1073)

பிரிவால் துயருறும்
கணவர், மகள் (ஷாலு) மற்றும்
அம்மா, அப்பா, குடும்பத்தினர்.

4 ம் வட்டாரம்,
முள்ளியவளை.

# மரண அறிவித்தல்

பிறப்பு 17 – 01 – 1934



இறப்பு 01 – 01 – 2021

## சரஸ்வதி கதிர்காமு

திகிரி, புலோலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் சூசையப்பர் கோவில் வீதி, புலோலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு சரஸ்வதி நேற்று (01.01.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முருகேசு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் கதிர்காமுவின் அன்பு மனைவியும் முருகானந்ததாஸ் (ஆசிரியர் - வல்வெட்டி இ.த.க.பாடசாலை), கிருபானந்ததாஸ் (கனடா), அருளானந்ததேவி, கலாநந்ததேவி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வசந்தி (ஆசிரியை - நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை), மாலினி (கனடா) கலாநாதன் (நாதன் ஸ்ரோர்ஸ்), மணிவாசகன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பாவலன், கவிதன், கீதனன், மதுஷங்கன், மதுரன், மகிழினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (03.01.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-1081)

புனித சூசையப்பர் வீதி,
புலோலி தெற்கு, புலோலி.

மகள் : 021 226 3409
மகன் : 077 652 9022

தகவல்:-
குடும்பத்தினர்

# புதுவருட தினத்தன்று

# காணாமலாக்கப்பட்ட உறவுகள் போராட்டம்




(நெளுக்குளம்)

காணாமல் ஆக்கப்பட்ட தாய்மார்களால், மார்ச் மாதத்தில் முக்கியமான பரிந்துரைகளை செயற்படுத்துவதற்காக சக்தி வாய்ந்த நாடுகளையும் ஐ.நாவையும் வலியுறுத்தக் கோரி மின் அஞ்சல் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வவுனியாவில் போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் போனவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

புதுவருடதினமான நேற்று வவுனியாவில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும் போது அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

எமது போராட்டம் 1414 நாட்களை எட்டுகின்றது. முக்கியமாக, இந்த ஆண்டு மார்ச் மாதம், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை ஒரு முக்கியமான முடிவை எடுக்கவுள்ளது. அவர்களின் புதிய தீர்மானத்தில் சேர்ப்பதற்காக நாம் முன்வைத்துள்ள யோசனையை அனைத்து நாடுகளும் கவனத்தில் எடுக்கவேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ஜ-4-299)

# கட்டாக்காலி மாடுகள் பிடிப்பு



(குருமன்காடு)

வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் வீதிகளில் கட்டாக்காலி மாடுகளினால் போக்குவரத்துக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டு வந்த நிலையில் 170 கட்டாக்காலி மாடுகள் நகரசபையால் பிடிக்கப்பட்டன.

புதுவருடப்பிறப்பை முன்னிட்டு நகரில் அதிகரிக்கும் வாகன நெரிசலின் போது கட்டாக்காலி மாடுகளினால் விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் வவுனியா நகரசபையினால் இந் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. நகரசபை உறுப்பினர்களின் மாடுகள் உட்பட 170 மாடுகள் இவ்வாறு பிடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பிடிக்கப்பட்ட கட்டாக்காலி மாடுகள் வவுனியா நகரசபை வளாகத்திலும், வேப்பங்குளம் நகரசபை வளாகத்திலும் அடைத்து வைக்கப்பட்டுள்ளன. மாட்டின் உரிமையாளர்கள் பிடிகூலி 600ரூபா, தண்டம் 1000ரூபா, ஒரு நாள் பராமரிப்பு செலவு 300 ரூபா ஆகியவற்றினை செலுத்தி பெற்றுக் கொள்ள முடியுமெனவும் பராமரிப்பு செலவு நாளாந்தம் 300 ரூபா விதிக்கப்படுமென நகரசபையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அண்மைக் காலமாக வவுனியாவில் இக் கட்டாக்காலி மாடுகளால் போக்குவரத்துக்கு பெரும் இடை யூறுகள் ஏற்பட்டதுடன், பல வீதி விபத்துக்களும் ஏற்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4-5-250)

# தேர்தல்கள் ஆணைக்குழுவின் முக்கிய தீர்மானம்

(கொழும்பு)

புதிய அரசியல்கட்சிகளை பதிவு செய்வதற்கான நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கு குழுவொன்றை நியமிக்க தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

குறித்த குழுவின் பரிந்துரைகள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்கான நடவடிக்கை ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு முன்னதாக தெரிவித்திருந்தது.

மேலும் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் எதிர்வரும் 11 ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## அந்தியேட்டிக் கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 06 – 12 – 1965

மறைவு 19 – 12 – 2020



**அமரர். நவமணி ஐயா லோகிதா சுதாகரன் (பாப்பா)**

**(ஆசிரியை - உவெஸ்லி கல்லூரி, கொழும்பு)**

யாழ்ப்பாணம் மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கிராண்பாஸை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னார் 19.12.2020 சனிக்கிழமை அன்று அம்பாள் பதம் அடைந்தார். அன்னாரது இறுதிக் கிரியைகளில் பங்குபற்றியும் தொலைபேசி ஊடாகவும் சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் இரங்கலைத் தெரிவித்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், பாடசாலைச் சமூகத்தினர் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்தோடு அன்னாரது ஆத்மசாந்தி கிரியைகள் 03.01.2021 (ஞாயிற்றுக்கிழமை) காலை 8.00 மணி அளவில் கீரிமலை புண்ணிய தீர்த்தத்தில் நடைபெறும். அத்தோடு 05.01.2021 (செவ்வாய்க்கிழமை) அன்று ஆத்மசாந்தி பிரார்த்தனையும் மதிய போசனமும் குளங்கரை வீதி, கோண்டாவில் எனும் முகவரியில் நடைபெறும். இவ்விரு நிகழ்வுகளிலும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் பங்குகொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்

இந்த அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாகவும் கருதி ஏற்றுக் கொள்ளுமாறுகேட்டுக்கொள்கின்றோம்

(5143)

குளங்கரை வீதி, கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
077 549 6321 (கணவர்)
076 672 1802(மகன்)



## 9ம் மாத நினைவினில்...

அமரர்.
திருமதி கோணேஸ்வரன்
சிவகௌரி



காலம் இன்னும் இருக்கையிலே
காலன் அவன் முந்திவிட்டான்
ஓலம் இடும் பிள்ளைகளுக்கு
ஒளிந்து நீ சென்று விட்டாய்
கோலம் போல் இருந்த வாழ்வு
கொள்ளையிட்டுப் போன பின்னே
ஆல மரமொன்று
அடியோடு சாய்ந்ததாய்
ஆடித்தான் போய்விட்டோம்
வழியின்றி நாமே

பிறப்பு
1976.10.20

இறப்பு
2020.04.02

(4344)

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

குடும்பத்தினர்.

# இந்திய ஹொக்கி அணியின் முன்னாள் வீரர் காலமானார்



உலக கிண்ணத்தை வென்ற இந்திய முன்னாள் ஹொக்கி வீரர் மைக்கேல் கோன்டா உடல்நலக் குறைவால் நேற்று முன்தினம் 73 ஆவது வயதில் உயிரிழந்துள்ளார்.

இந்திய முன்னாள் ஹொக்கி வீரர் மைக்கேல் கோன்டா. 1972-ம் ஆண்டு ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்ற இந்திய ஹொக்கி அணியிலும், 1975-ம் ஆண்டு உலக கிண்ணத்தை வென்ற இந்திய அணியிலும் இடம் பெற்றவர் ஆவார்.

சிறிது காலம் உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்ட மைக்கேல் கோன்டா ஒடிசா மாநிலம் ரூர்கேலாவில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் மரணம் அடைந்தார். (4)

# முறிந்த கால் விரல்களுடன் 21 ஓவர் பந்து வீசிய வீரர்



பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் இரண்டு விரல்கள் முறிந்த நிலையிலும், நியூசிலாந்து அணிக்காக விளையாடி வெற்றியை தேடிக்கொடுத்துள்ளார் நீல் வாக்னர்.

நியூசிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி மவுன்ட் மவுங்கானுயில் நடைபெற்றது.

நியூசிலாந்து முதல் இன்னிங்ஸில் துடுப்பாட்டத்தில் ஈடுபடும் போது பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் வீசிய யார்க்கர் பந்து நீல் வாக்னரில் வலது கால் பாதத்தை பலமாக தாக்கியது. இதில் அவரது இரண்டு விரல்கள் முறிந்தன.

இருப்பினும், வலி நிவாரண மருந்து ஊசியை போட்டுக் கொண்டு முதல் இன்னிங்ஸில் 21 ஓவர்கள் வீசி 2 விக்கெட் வீழ்த்தினார்.

2-வது இன்னிங்ஸிலும் 28 ஓவர்கள் வீசிய நீல் வாக்னர் 2 விக்கெட் கைப்பற்றினார். விரல்கள் முறிந்த நிலையிலும், வலி நிவாரண ஊசியை போட்டுக் கொண்டு அணியின் வெற்றிக்காக அஞ்சாமல் பந்து வீசிய நீல் வாக்னரை பாகிஸ்தான் அணி வீரர்கள் பாராட்டியுள்ளனர்.

இதனிடையே, நீல் வாக்னர் காயம் காரணமாக 2-வது டெஸ்டில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.(4)

# இந்தியன் சுப்பர் லீக் கோவா அணி வெற்றி

இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து போட்டியில் கடந்த 30 ஆம் திகதி நடந்த ஆட்டத்தில் ஐதராபாத்தை வீழ்த்தி கோவா அணி 4ஆவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

7 ஆவது இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து போட்டி தொடர் கோவாவில் நடந்து வருகிறது. கடந்த புதன்கிழமை நடைபெற்ற 43 ஆவது லீக் ஆட்டத்தில் கோவா-ஐதராபாத் அணிகள் மோதின.

இதில் ஐதராபாத் அணி வீரர் அரிடேனே 58ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார்.

கடைசி நிமிடங்களில் கோவா அணி 2 கோல் அடித்து வெற்றி பெற்றது. அந்த அணி வீரர்கள் இஷான் பன்டிட்டா 87ஆவது நிமிடத்திலும், இகோர் அங்குலோ 91-வது நிமிடத்திலும் கோல் அடித்தனர். கோவா அணி பெற்ற 4ஆவது வெற்றி இதுவாகும். அந்த அணி 14 புள்ளியுடன் 3ஆவது இடத்தில் உள்ளது. ஐதராபாத் அணி 3 தோல் வியைச் சந்தித்தது. அந்த அணி 2 வெற்றி, 3 சமநிலை பெற்றது. (4)

# இந்தியா- ஆஸி டெஸ்ட் தொடர்; தமிழக வீரர் நடராஜன் இணைப்பு

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி இரண்டு டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியில் தமிழக வீரர் நடராஜன் இடம்பிடித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மெல்பேர்னில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின், 3வது நாளின் போது இந்திய வேகப்பந்து வீச்சாளர் உமேஷ் யாதவ் காயமடைந்தார்.

காயமடைந்த உமேஷ் யாதவ் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3வது மற்றும் 4வது டெஸ்ட் போட்டியிலிருந்து விலகினார் என்றும், மேலும் புதன்கிழமை இரவு அவுஸ்திரேலியாவிலிருந்து இந்தியா புறப்பட்டார்.

நாடு திரும்பிய உடன் உமேஷ் யாதவ் பெங்களூரில் உள்ள தேசிய கிரிக்கெட் அகடமியில் சிகிச்சை மற்றும் பயிற்சி பெறுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




அதேசமயம், உமேஷ் யாதவுக்கு பதிலாக இந்திய டெஸ்ட் அணியில் தமிழக வீரர் நடராஜன் சேர்க்கப்படுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# டெஸ்ட் தரவரிசையில் வில்லியம்சன் முதலிடம்



மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிராக இரட்டை சதமும், பாகிஸ்தானுக்கு எதிராக சத மும் விளாசிய கேன் வில்லியம் சன் ஐ.சி.சி.டெஸ்ட் தரவரிசையில் முதல் இடத்தை பிடித்துள்ளார்.

ஐ.சி.சி. டெஸ்ட் பட்ஸ்மேன் தரவரிசையில் அவுஸ்திரேலிய பட்ஸ்மன் ஸ்மித் முதல் இடத்தில் இருந்தார். இந்திய அணி கப்டன் விராட் கோலி 2 ஆவது இடத்திலும், நியூசிலாந்து அணி கப்டன் கேன் வில்லியம்சன் 3 ஆவது இடத்திலும் இருந்தனர்.

கேன் வில்லியம்சன் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான முதல் டெஸ்டில் இரட்டை சதமும், பாகிஸ்தான் அணிக்கெதிரான முதல் டெஸ்டில் சதமும் விளாசினார். அதே சமயம் ஸ்மித் இந்தியாவுக்கு எதிரான இரண்டு டெஸ்ட் போட்டியில் மிகக் குறைந்த ரன்களே அடித்தார்.

விராட் கோலி அடிலெய்டு டெஸ்டில் முதல் இன்னிங்சில் 74 ரன்கள் அடித்தார். 2ஆவது இன்னிங்சில் 4 ரன்னில் ஆட்டமிழந்தார்.

இதனால் 3ஆவது இடத்தில் இருந்து கேன் வில்லியம்சன் 890 புள்ளிகளுடன் முதல் இடத்திற்கு முன்னேறியுள்ளார். விராட் கோலி 2 ஆவது இடத்தில் நீடிக்கிறார். ஸ்டீவ் ஸ்மித் 3ஆவது இடத்திற்கு பின்தங்கியுள்ளார். (4)

# பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட்; புதிய நியூசிலாந்து அணி அறிவிப்பு



பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடும், எதிர்பார்ப்பு மிக்க மாற்றம் கலந்த நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அணியில், காயமடைந்த வேகப்பந்து வீச்சாளர் நெய்ல் வாக்னருக்கு பதிலாக மெட் ஹென்றி அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

கேன் வில்லியம்சன் தலைமையிலான அணியில், டொம் பிளென்டல், ட்ரெண்ட் போல்ட், மெட் ஹென்ரி, கெய்ல் ஜேமிசன், டொம் லதம், டேரில் மிட்செல், ஹென்ரி நிக்கோல்ஸ், மிட்செல் சான்ட்னர், டிம் சவுத்தி, ரோஸ் டெய்லர், வாட்லிங், வில் யங் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி, இன்று கிறிஸ்ட்சர்ச் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

ஏற்கனவே முதல் டெஸ்ட் போட்டியில், நியூசிலாந்து அணி 101 ஓட்டங்களால் வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# துணை கப்டனாக ரோஹித்

சிட்னி, பிரிஸ்பேன் டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியின் துணைக் கப்டனாக ரோகித் சர்மா நியமிக்கப்பட்டுள்ளதாக பி.சி.சி.ஐ. அறிவித்துள்ளது.

இந்திய டெஸ்ட் அணியின் கப்டனாக விராட் கோலியும், துணைக் கப்டனாக ரஹானேவும் உள்ளனர். அடிலெய்டு டெஸ்ட் போட்டி முடிந்த பிறகு விராட் கோலி இந்தியா திரும்பியதால் ரஹானே கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். அப்போது புஜாரா துணைக்கப்டனாக நியமிக்கப்பட்டார்.

காயத்தில் இருந்து மீண்ட ரோகித் சர்மா, அவுஸ்திரேலியா சென்று தனிமைப்படுத்தலை முடித்துக் கொண்டு கடைசி இரண்டு போட்டியில் விளையாடுவதற்கான இந்திய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். அடுத்த இரண்டு போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. புஜாராவுக்குப் பதிலாக தற்போது ரோகித் சர்மா துணைக் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். (4)

# ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவில்

## அமரர். கணபதிப்பிள்ளை திருமலைச்செல்வம் (செல்லா)

— உரிமையாளர், செல்லா டிஜிற்றல் வீடியோ நவிண்டில் —

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 19 — 05 — 1968 | 02 — 01 — 2020 |



இடியென வந்தசெய்தி எம் இதயத்தில் இறங்கி
உயிர்நாடி வரை அது ஊர்ந்து சென்றதுவோ
இனி எங்கே காண்போம்
கனிவான உனது பார்வையும்
புன்னகை தவழும் உன் பூமுகமும்
இன்று அடங்கிப் போனது ஏன்?
கதிகலங்கி நிற்கின்றோம்
கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.
உடல் வருத்தம் பாராத
உண்மை உழைப்பின் உதாரணம்..!

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்

ஓராண்டு சென்றாலும்
உயரத்தில் நீ இருந்தாலும்
உயிர் உள்ளவரை உன் நினைவில் நாங்கள்...!



(c-1074)

ஆண்டொன்றோடி மறைந்தாலும்
ஆறாத்துயருடன் வாழும்
செல்லாவின் நண்பர்கள்

# சமூக இயங்குதளத்தில் கொரோனாவை எதிர்கொள்வது எவ்வாறு?



## தெளிவுபடுத்துகிறார் வைத்தியர் யமுனாநந்தா

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒருவருட காலமாக உலகின் மூலைமுடுக்கு எங்கும் பாரிய தொற்றினை ஏற்படுத்தி நவீன உலக இயக் கத்தில் பாரிய தடங்கலை கொரோ னாத் தொற்று ஏற்படுத்தி உள்ளது. ஆனால் அதனை எதிர்கொண்டு முன்னேற மனித குலம் திடசங்கற்பம் பூண்டுள்ளது என யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சி.யமுனாநந்தா தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா தொற்றின் போது சமூக இயக்கத்தினை செயற்படுத்த ஐந்து அம்சங்கள் இன்றியமையாதவையாகின்றன.

அவையாவன, 1.விஞ் ஞான ரீதியான அணுகல் Scientific Approach, 2. வளமுகாமைத்துவம் Logitic Management, 3.பயிற்சி அளித்தல் Training, 4.நிர்வகித்தல் Governance, 5. தொடர்பாடல் Communication இவ் ஐந்து அம்சங்களும் சமூக இயங்கு தளத்தில் கொரோனாவிற்கு ஊடாக வாழ்தலில் சிறப்பாக அமைய வேண்டும் என்பதனை கடந்த ஒரு வருட அனுபவம் எமக்கு கற்று தந்துள்ளது.

இவற்றுடன் அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களையும் நாம் பேணுதல் வேண்டும். அதாவது சமூக இடைவெளி பேணுதல், கை கழுவுதல், தூய்மையின் பிரயோயகம், முகக் கவசம் அணிதல் என்பவற்றையும் நாம் தவறாது கைக் கொள்ளுதல் அவசியம்.

முதலாவதாக மருத்துவ சேவையினைக் கருதும் போது கொரோனாத் தொற்று தொடர்பான விஞ்ஞான ரீதியான உண்மைகள் மிகவும் ஆழமானவை. ஆனால் அவை அனைத்தும் சாதாரண மக்களுக்குப் பயம் ஊட்டுவதாக அமையக் கூடாது.

உதாரணமாக தற்போது கொரோனாத் தொற்று சமூக பரவல் அடைந்து உள்ளதா? இல்லையா? என்ற கேள்விக்கான விடை, கொரோனாத் தொற்று வீரியத்தன்மை குறைந்து விட்டதா? என்பதற்கான விடை, கொரோனாத் தொற்றுக்கு தடுப்பூசி போடப்பட வேண்டிய தேவை ஏற்படுமா? என்பதற்கான விடை விஞ்ஞான ரீதியில் அணுகப்படுதல் வேண்டும்.

அதேபோல் நோய்க் காவிகள் சமூகத்தில் அடையாளம் காணப்படாது உள்ளபோது இறந்த கொரோனாத் தொற்று உடையவரின் உடலைப் புதைப்பது ஆபத்து இல்லை என்ற உண்மை இவையாவும் அடிப்படை விஞ்ஞானத்தின் விடைகளே. கொரோனாத் தொற்றுத் தடுப்பில் மனித உரிமை அணுகல் மிகவும் இன்றியமையாதது.

மருத்துவசேவைக்கு அப்பால் ஏனைய சமூகவளங்கள் சேவைகளான கல்விச் சேவை, வங்கிச் சேவை, நிர்வாகச் சேவை, தொலைத் தொடர்புச் சேவை போன்ற பலவும் மேற்கூறிய ஐந்து அம்சங்கள் தமது செயற்பாட்டில் பரிமாணமாக்கல் மிகவும் முக்கியமாகும்.

கொரோனாத் தொற்றுத் தொடர்பாக தேவையற்ற பயம் தேவை இல்லை. இதனைச் சாதாரண சுவாசத் தொற்று நோய் போல் கருத வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.

சமூக இடைவெளிபேணிய சமூக இணைப்பை கட்டாயம் மேற்கொள்ள வேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம்.

சமூக இணைப்பை நோய்ப் பரம்பலற்ற முறையில் வலுப்படுத்துவதில் விஞ்ஞான ரீதியான அணுகல், வள முகாமைத்துவம், பயிற்சி நெறிகள், நிர்வகிக்கும் முறைமை, தொடர்பாடல் மேன்நிலை என்பன சமூக மட்டத்திலும், சிறு குழுக்கள் மட்டத்திலும் குடும்ப மட்டத்திலும் மேற்கொள்வது மிகவும் அவசியமாகும். மேலும் நிர்வாக நிலையிலும் அர்சியல் ஜனநாயக மட்டத்திலும் கொரோனாக் கால சமூக இணைப்புப் பலப்படுத்தல் முக்கியமானது.

ஏனெனில் அது தவறும் பட்சத்தில் சமூகத்தில் பின்தங்கியவர்கள் மற்றும் இன, மத, பிரதேச ரீதியான புறக்கணிப்பு கொரோனாக் கட்டுப்பாடு என்ற போர்வையில் நிகழ்வதற்கான சாத்தியங்கள் அதிகம் உண்டு என அவர் மேலும் தெரிவித்தார். (5-4)

# நாங்களும் உங்களைப் போல் மனிதர்களே எங்களை இழிவானவர்கள் போல் நோக்காதீர்கள்

(சாவகச்சேரி)


சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் வேல்ட் விஷன், செவணத ஆகிய நிறுவனங்கள் நகர சபையுடன் இணைந்து பின்லா திட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் "எங்களுக்காக செய்யுங்கள் " எனும் தொனிப் பொருளில் கழிவு முகாமைத்துவம் தொடர் பான விழிப் புணர்வு ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த விழிப்புணர்வு நிகழ்வில் சாவகச்சேரி நகரசபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு "கழிவுகளை தரம் பிரித்து வழாங்குங்கள், நாங்களும் உங்களைப் போல் மனிதர்களே; எங்களை இழிவானவர்கள் போல் நோக்காதீர்கள். அதனால் எங்களுக்காகச் செய்யுங்கள் " எனப் பொது மக்கள் மற்றும் வர்த்தகர்களிடம் விநயமாகக் கேட்டிருந்தனர். குறித்த விழிப் புணர்வு நிகழ்வில் சாவகச்சேரி நகரசபையின் பொது ச்சுகாதாரப் பரிசோதகர் தளிர்ராஜ் கலந்து கொண்டார். (5-4-30)



யாழ்ப்பாணம் - காங்கேசன்துறையில் உள்ள வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தில் 2021 ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ணவின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 198 புள்ளிகளை பெற்று வடக்கு மாகாணத்திற்கு பெருமை சேர்த்த தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் மாணவி சுபாஷ்கரன் யனுஷ்காவிற்கு பரிசுப் பொருட்கள் வழுங்கி கௌரவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படம்:சிவசாந்தன்)

# நிபந்தனைகளின்றி அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும்-பிரதேச சபைத் தவிசாளர்



(சாவகச்சேரி)

வருடக்கணக்கில் சிறைகளில் வாடி வரும் அரசியல் கைதிகளை எந்தவித நிபந்தனையும் இன்றி விடுவிக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க. வாமதேவன் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் சாவகச்சேரி பிரதேச சபையில் இடம் பெற்ற வருட இறுதி அமர்வில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து பத்து வருடங்கள் கடந்தும் இன்றும் எம் மக்கள் மனங்களில் பலவடுக்கள் இழையோடிப் போயுள்ளன.

அவற்றையெல்லாம் இந்த அரசாங்கம் கண்டுகொள்ளாமல் உள்ளது.

அரசுக்கும்-சிறுபான்மை இனங்களுக்கும் இடையே சரியான புரிதல் இல்லை. அரசியல் கைதிகள் வருடக் கணக்கில் சிறைச்சாலைகளில் வாடி வருகின்றனர்.

அவர்கள் கொரோனா தொற்றால் பாதிக்கப்படுகின்ற நிலையும் காணப்படுகிறது.

இவ்வாறான செயற்பாடுகள்தான் இனங்களுக்கு இடையே குரோதம் ஏற்படக் காரணம். அரசியல் கைதிகளை எந்தவித நிபந்தனைகளும் இன்றி விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

சகலரும் தமக்கான வாழ்வுரிமை அடிப்படையில் வாழ அரசு வழிவகை செய்ய வேண்டும். அரசாங்கம் சிறுபான்மை இனங்களான தமிழ், முஸ்லிம் மக்களை அனுசரித்துச் செல்ல வேண்டும். நாங்களும் இந்த நாட்டின் பிரஜைகள் தான். எங்களுக்கும் சமவுரிமை கிடைக்க வேண்டும்.

யாரும் யாருடனும் முரண்பட்டு நிம்மதியான வாழ்க்கையை வாழ முடியாது.

இந்த உண்மையை அனைவரும் உணர வேண்டும். இன, மத.பேதம் மறந்து ஒற்றுமையை வளர்க்க வேண்டும்.

இந்த அரசு சிறுபான்மையின மக்களுக்கு ஆக்கபூர்வமான நிரந்தர அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றினை வழங்க முன்வர வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார்.

(5-4-30)



கொடிகாமம் வணிகர் கழகம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கொடிகாமம் மத்தியைச் சேர்ந்த 150 குடும்பங்களுக்கு நுளம்புவலை வழங்கியது. இந் நிகழ்வில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி எஸ். சுதேஸ் குமார், சாவகச்சேரி பிரதேசசபை உப தவிசாளர் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்:சுபேசன்)

# ‘சூப்பர் முஸ்லிம்’ பெயரிலான குழு; பொலிஸ்மா அதிபருக்கு அறிக்கை

(கல்முனை)

கல்முனையை தளமாக கொண்டு செயற்படுவதாக கூறப்படும் “சூப்பர் முஸ்லிம்” எனும் அமைப்பு அல்லது குழு தொடர்பில் விசேட அறிக்கை ஒன்று பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்னவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவிலும், மேல் மாகாண உளவுப் பிரிவிலும் சேவையாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை இரகசிய அறிக்கையாக இந்த விசேட அறிக்கையை கையளித்துள்ளார்.

எவ்வாறாயினும் இந்த சூப்பர் முஸ்லிம் எனும் அமைப்பு தொடர்பில், எஸ்.ஐ.எஸ். எனப்படும் தேசிய உளவுச் சேவை தீவிர கண்காணிப்பு மற்றும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

ஸ்ரீஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் முன்னர் சேவையாற்றியதாக கூறப்படும் வைத்தியர் ஒருவர் இந்த குழுவுக்கு தலைமை வகிப்பதாகவும், இணையத்தளம் ஊடாக இக்குழுவினர் அடிப்படைவாதத்தை விதைத்து வருவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அனர்த்தம் ஒன்றை அடுத்து கிடைக்கப் பெற்ற நன்கொடைகளை வைத்து இவ்வமைப்பு தோற்றம் பெற்றுள்ளதாகவும், தற்போதும் வெளிநாட்டு நன்கொடைகள் அவ்வமைப்புக்கு கிடைப்பதாக சந்தேகிக்கப்படுவதாகவும் அது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும் அறிய முடிகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1976 இல் பிறந்த உத்திரம் நட்சத்திரம் 3ம் பாதம் பாவக்கிரகம் 37 சூரியன் செவ்வாய் 4 இல் உள்ள ஆசிரியர் தொழில் புரியும் மணமகனுக்கு நல்ல குணமான மணமகள் தேவை. (5136)

**தொடர்பு: 077 538 6405**

**மணமகன் தேவை**

கொழும்பிலுள்ள U.K.நிறுவனத்தில் பணிபுரியும் உயர்குலத்து IT படித்த 24 வயது நிரம்பியுள்ள சூரியன் செவ்வாய் உடைய கிறிஸ்தவ பெண்ணிற்கு அரச அல்லது தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் மணமகன் தேவை. (C-1074)

**தொடர்புகளுக்கு: 077 434 9105**

**Technicians தேவை**

கொழும்பில் இயங்கி வரும் டிஷ் ஆண்டெனா மற்றும் கேபிள் டிவி உதிரிப்பாக விற்பனை மற்றும் சேவை நிறுவனத்திற்கு கீழ்க்காணும் வேலைக்கு ஆட்கள் தேவை.

01. டிஷ் ஆண்டெனா ரிஸீவர்கள் திருத்தக்கூடிய எலெக்ட்ரோனிக் டெக்னீசியன் திறமைக்கு ஏற்ப Rs.50.000/ வரை +over time

02. டிஷ் ஆண்டெனா பொருத்துநர் திறமைக்கு ஏற்ப Rs.50,000/ +over time

03. விற்பனை உதவியாளர் திறமைக்கு ஏற்ப Rs.30, 000/ வரை உணவு, தங்குமிடம் உண்டு

07/01/2021 இற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

Contact kumar @ 0777710785

# சீன வெடி கொளுத்திய இரு சிறுவர்கள் படுகாயம்

(திருமலை)

திருகோணமலை - மஹதிவுல்வெவ பிரதேசத்தில் புதுவருடத்திற்காக சீனவெடி கொளுத்தி விளையாடிய இரு சிறுவர்கள் காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ள நிலையில் படுகாயமடைந்த சிறுவர்கள் மஹதிவுல்வெவ பகுதியைச் சேர்ந்த 9 வயது மற்றும்11வயது உடையவர்கள்ஆவர்.

2021ஆம் ஆண்டை வரவேற்கும் முகமாக சீன வெடிகளை கொளுத்தி கொண்டிருந்த வேளையில் தீ கையில் பட்டதால் இரு சிறுவர்களும் காயங்களுக்கு இலக்காகி மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஜ-4)

# தப்பியோடிய கொரோனா நோயாளிகளை கண்டுபிடிக்க முடியாமல் திணறும் பொலிஸார்

(பொலநறுவை)

பொலநறுவையில் கொரோனாச் சிகிச்சை நிலையத்தில் இருந்து தப்பிச் சென்ற ஐந்து பேரில் நால்வரை இன்னும் கைது செய்ய முடியவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு தப்பிச் சென்ற கொரோனா நோயாளிகளான சிறைக்கைதிகளை கைது செய்ய உதவுமாறு பொலிஸார் பொது மக்களின் உதவியை நாடியுள்ளனர்.

கொரோனா தொற்று ஏற்பட்ட நிலையில், பொலநறுவை, கல்லேல்ல கொரோனா சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்த 5 பேர் நேற்று முன்தினம் அதிகாலை அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

அவர்களில் ஒருவர் மாத்திரம் கைது செய்யப்பட்டிருந்தார்.

ஏனையவர்கள் தொடர்பில் தகவல் கிடைத்தால் பொலநறுவை தலைமை பொலிஸ் பரிசோதகரின் 071 859 1233 என்ற இலக்கத்திற்கு அல்லது



அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ஜ-4)

**கேள்வி விண்ணப்பம் கோரல்**

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கமானது வைத்தியசாலை வளாகத்தில் இயங்கும் சிற்றுண்டிச்சாலையையும், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையத்தையும் 01.02.2021 முதல் 31.12.2021 வரை குத்தகைக்கு நடாத்துவதற்கு கேள்வி விண்ணப்பம் கோரப்படுகிறது. இதற்கான விண்ணப்பப்படிவங்களை மீளளிக்கப்படாத தொகை ரூபா 1000/- இனைச் செலுத்தி 03.01.2021 முதல் 17.01.2021 காலை 9.00 மணிவரை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பங்கள் 17.01.2021 காலை 10 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

அன்றைய தினமே 17.01.2021 காலை 11.00 மணிக்கு நடைபெறும் எமது நிர்வாக சபைக்கூட்டத்தில் இவ்விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசீலிக்கப்படும்.

Dr.V.கமலநாதன்
தலைவர்,
நோயாளர் நலன்புரிச்சங்கம்,
ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை.

(C-1069)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**பாராட்டு விழா அழைப்பு**





விஸ்வலிங்கம் மணிவண்ணன்
முதல்வர் மாநகர சபை
(பிரபல சட்டத்தரணி)

பத்மநாதன் மயூரன்
தவிசாளர், நல்லூர் பிரதேச சபை
(R.P.Co Insurance
முகாமையாளர்)

காலம் :- 02.01.2021 இன்று சனிக்கிழமை பி.ப. 4 மணிக்கு
இடம் :- கொக்குவில் கிருபாகர சிவசுப்ரமணிய கோயில்,கொக்குவில்.

1. இறைவணக்கம்
2. பொன்னாடை போர்த்தி கௌரவித்தல்
3. நினைவுச்சின்னம் வழங்குதல்
4. வாழ்த்துக்கள்

இங்ஙனம்
கொக்குவில் இளைஞர்களும் வர்த்தக நண்பர்களும்

**NOTICE**
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
OPERATIONAL TECHNICAL SECRETARIAT (OTS)
WORLD BANK FUNDED ACCELERATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT (AHEAD) OPERATION

POST OF PROJECT ASSISTANT CUM RESEARCH ASSISTANT (FULL TIME) – ON CONTRACT BASIS – 01

RESEARCH INNOVATION AND COMMERCIALIZATION (RIC) – FACULTY OF ENGINEERING

The University of Jaffna, Sri Lanka will entertain applications for the above mentioned post under OTS – AHEAD Operation from suitably qualified persons up to 21.01.2021.

The Post carries all inclusive monthly salary of Rs.70,000/= in addition applicable EPF & ETF will be paid.

Applicants are requested to visit Jaffna University Website www.jfn.ac.lk for further details.

Registrar

# மணல் அகழ்வை தடுக்க நடவடிக்கை எடுங்கள்

## மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

பழையமுறிகண்டி கிராமத்தில் கடந்த பத்தாண்டுகளாக தொடர்கின்ற மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

2009 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பழையமுறிகண்டிக் குளத்தின் கீழுள்ள ஆற்றுப்படுகைகளில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு நடைபெறுகிறது.

இம்மணல் அகழ்வு தொடர்பாக துணுக்காய் பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிராம மக்களினால் தெரிவிக்கப்பட்ட போதிலும் மணல் அகழ்வு தடுக்கப்படவில்லை. இதன் காரணமாக பழையமுறிகண்டிக் குளத்தின் அணைக்கட்டிற்கு ஆபத்து உருவாகி வருவதாகத் தெரிவிக்கும் கிராமமக்கள் வறட்சி காலங்களில் குளத்தின் உட் பகுதியிலும் மணல் அகழ்வுகள் நடைபெற்றதாகவும் தெரிவிக்கின்றனர். பழைய முறிகண்டியில் இருந்து புத்துவெட்டுவான் சந்தி வரையான தற்காலிக வீதி டிப்பர்கள் பயணிப்பதனால் வீதிகள் சேதமடைகின்றன.

புத்துவெட்டுவானில் இருந்து கொக்காவில் சந்தி வரை புனரமைக்கப்பட்ட நிரந்தர வீதியும் சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது. இம் மணல் அகழ்வு தொடர்பாக துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தொடரும் மணல் அகழ்வைத் தடுக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-350)

# எல்லைக் கற்கள் இடுதல் தொடர்பான கலந்துரையாடல்



(பனிக்கன்குளம்)

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குமுழமுனை மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் வனவள பாதுகாப்புத் திணைக்களத்தினால் எல்லைக் கற்கள் இடும்போது ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக சிறிய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்ட பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறிந்து கொண்ட அரசாங்க அதிபர் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் அதிகாரிகளை உள்ளடக்கிய குழுவொன்றினை அமைத்து எதிர்வரும் 15 ஆம் திகதி களவிஜயம் மேற்கொண்ட பின்னர் முடிவெடுப்பதாக அறிவித்தார்.

இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், மாகாண காணி ஆணையாளர், சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர், உதவி மாவட்ட செயலாளர், வன ஜீவராசிகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர், மாவட்ட செயலக காணிப் பயன்பாட்டு திட்டமிடல் பிரிவின் உதவிப் பணிப்பாளர், மாவட்ட வனவள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், காணிப்பிரிவு உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், கிராமிய அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-4-281)


# தனிமைப்படுத்தப்பட்ட 110 குடும்பங்களுக்கு 11 இலட்சம் பெறுமதியான உலர் உணவு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் அண்மையில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் நபரொருவருக்கு கொரோனத் தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அவருடன் தொடர்புகளைப் பேணிய பல குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன இந் நிலையில் தனிமைப்படுத்தப்பட்ட 110 குடும்பங்களுக்கு மாவட்ட செயலகத்தினால் நேற்று தலா 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலருணவு பொருட்கள் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (5-4-281)

# மீண்டும் மீன்குஞ்சுகளை விடக்கோரும் சங்கங்கள்



(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறிய, பெரிய குளங்கள் நிரம்பி வான் பாய்ந்துள்ள நிலையில் வெள்ளத்துடன் குளங்களில் இருந்து பெருமளவு மீன்கள் வெளியேறி உள்ள நிலையில் குளங்களுக்குள் மீன் குஞ்சுகளை விடுவதற்கான நடவடிக்கையினை முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட நன்னீர் மீன்பிடிச் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்திலே நன்னீர் மீன்பிடி முக்கிய தொழிலாகக் காணப்படுகின்றது. இது கிராம மக்களின் வாழ்வாதாரத்தினை தீர்மானிக்கும் சக்தியாகவும் காணப்படுகிறது. 2009 ஆம் ஆண்டின் பின்னர் தென்னிலங்கைக்கான நன்னீர் மீன்பிடி பெருமளவில் இடம்பெற்று வரும் நிலையில் தற்போது குளங்களில் இருந்து மீன்களும் குஞ்சுகளும் வெளியேறியுள்ளன. இந்நிலையில் குளங்களில் நன்னீர் மீன் பெருக்கத்தினை அதிகரிப்பதற்கு மீன் குஞ்சுகளை விடுவதற்கு மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நன்னீர் மீன்பிடிச் சங்கங்கள் வலியுறுத்தி உள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தின் கிராமங்களில் கடல் உணவு மிகக் குறைவாக விற்பனை செய்யப்படுவதன் காரணமாக நன்னீர் மீன்பிடியினை நம்பி மாவட்டத்தில் நூற்றுக் கணக்கான குடும்பங்கள் வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. (5-4-350)

# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி சர்வமதத் தலைவர்களுடன் உறவுகள் சந்திப்பு




(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளை கருணை அடிப்படையிலாவது விடுவிக்குமாறு கோரும் கருணை மனுவிற்கு ஆதரவு கோரி யாழ்.மாவட்டத்திலுள்ள சர்வமதத் தலைவர்களுடன் அரசியல் கைதிகளின் உறவுகள் நேற்று முன். தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

ஒன்றுபட்டு தமிழ் அரசியல் கைதிகளை சிறை மீட்க வலியுறுத்தி அரசியல் கட்சி தலைவர்களையும் ஆன்மிகத் தரப்பினரையும் தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகள் கடந்த நாட்களில் தொடர்ச்சியாக நேரில் சந்தித்து வலியுறுத்தி வருகின்றனர்.

சிறைச்சாலைகளுக்குள் தொற்றா நோய்களினால் பீடிக்கப்பட்டு பாதிக்கப்பட்டுள்ளதுடன் உடல் அளவிலும் மனதளவிலும் பலவீனப்பட்ட நிலையில் காணப்படும் தமது உறவுகளை தற்போதைய கொரோனாத் தொற்றும் தாக்கியுள்ளதை அறிந்து மீளாத்துயருற்றிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகள் அவர்களது விடுதலைக்காக பல்வேறு தரப்புகளை சந்தித்து ஆதரவு கோரி வருகின்றனர்.

யாழ்.நாக விகாரை விகாராதிபதி விமல தேரர், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் யாழ்ப்பாணம்-கிளிநொச்சி மாவட்ட தலைவர் மௌலவி என்.எம்.இர்பான், செயலாளர் மௌலவி ஏ.எம்.றலீம், மானிப்பாய் யாத்திரஸ்தல பங்குத்தந்தை அருட்பணி ரெக்ஸ்சவுந்திராவையும் நேரில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.(ஜ-4)



புத்தாண்டு திருவிழா திருப்பலி மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இமானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில்கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.



**2021 ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது. தேசியக் கொடி ஏற்றப் பட்டு, தேசிய கீதமும் இசைக்கப்பட்டது. தொடர்ந்து மங்கல விளக்கேற்றல், 2 நிமிட மௌன அஞ்சலி மற்றும் சத்தியப் பிரமாணம் என்பன இடம் பெற்றிருந்தன. நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் சிறப்புரை யாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.**

(படம்:- சிவசாந்தன்)

# இராசிபலன்

02.01.2021
மார்கழி 18, சனிக்கிழமை
திருதியை முற்பகல் 9.29 மணிவரை
ஆயிலியம் முன்னிரவு 8.41 மணிவரை
சுபநேரம் 3.30-5.00 மணிவரை
இராகுகாலம் 9.30-11.00 மணிவரை
சந்திராஷ்டமம்:-உத்தராடம், திருவோணம்
சங்கடகர சதுர்த்தி விரதம்

வளவன்

**மேஷம்**: தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், வழிபாட்டு சிந்தனை மேலோங்கும் நாள், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**ரிஷபம்**: உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழில் போட்டிகள் மாறும், போசன சுகமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்**: கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், வெளியூர் பயணங்களால் நன்மையுண்டு, ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கடகம்**: கற்பனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமை யடைவீர்கள். போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**சிம்மம்**: எடுத்த காரியங்களை முடிப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், விருந்தினர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.

**கன்னி**: ஒளிமயமான எதிர்காலத்திற்கு உறுதுணை புரியும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம்.

**துலாம்**: செய் தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்**: வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், விருந்தினர் வருகையுண்டு, உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**தனுசு**: கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம், பிரயாண பயமுண்டு.

**மகரம்**: அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கும்பம்**: கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், உறவினர் வழி ஒத்துழைப்பு கிடைக்கும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**மீனம்**: பல நாட்களாக திட்டமிட்ட காரியம் இன்று நடைபெறலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், வருமானம் பெருக வழி சமைப்பீர்கள், பிறர் உதவியுண்டு.

உலகமே மூழ்கினும் நல்லதைச் சரியாகச் செய்.

# மனிதவளம் மற்றும் பௌதீக அபிவிருத்தி செயற்பாடுகள் மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது

## பிரதமர் பெருமிதம்

(கொழும்பு)

மனிதவள மற்றும் பௌதீக அபிவிருத்தி செயற்பாடுகள் மீண்டும் உயிர்ப்பிப்பதற்கு எமக்கு முடியுமானதாகியுள்ளதென பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"பாதுகாப்பான தேசத்திற்காக எமது தாய்நாட்டின் எதிர்காலம் குறித்து மக்கள் எம் மீது கொண்ட நம்பிக்கையை அன்புடன் நினைவுகூருகின்றோம்.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து மிகக் குறுகிய காலமே ஆன போதிலும் அக்காலப் பகுதியை மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காக செலவிடக்கூடியதாக அமைந்தமை குறித்து பெருமை கொள்கின்றோம்.

ஐந்து வருட காலமாக தடைப்பட்டிருந்த நாட்டின் மனிதவள மற்றும் பௌதீக அபிவிருத்தி செயற்பாடுகளை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கு எமக்கு முடியுமானதாயிற்று.

நாடு எதிர்கொண்டுள்ள இந்த சவால்களை மலர்ந்துள்ள புத்தாண்டில் நாம் ஒன்றிணைந்து வெற்றிகொள்ள முடியும்.

மலர்ந்துள்ள இவ்வருடம் அனைவருக்கும் சபீட்சம் மிகுந்த புத்தாண்டாக அமைய பிரார்த்திக்கின்றேன்" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# அலி சப்ரியை கைது செய்க



(கொழும்பு)

மரண நிர்வாகத்துறை செயற்பாடுகளில், நீதியமைச்சர் அலி சப்ரி நேரடியாகத் தலையிடுவதாகவும் அழுத்தம் கொடுப்பதாகவும் குற்றஞ்சாட்டியுள்ள இலங்கை நீதிமன்ற வைத்திய நிறுவன வைத்தியர்கள், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளனர்.

கொழும்பில் நடைபெற்ற விசேட கூட்டமொன்றில் எதிர்ப்பு யோசனையையும் நிறைவேற்றி உள்ளதாக அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த நிறுவனத்தின் தலைவர், நீதிமன்ற வைத்தியர் அசேல மென்டிஸின் கையெழுத்துடன் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, இலங்கை நீதிமன்ற வைத்தியர்களால் முன்னெடுக்கப்படும் சுயாதீன மரண நிர்வாகச் செயற்பாடுகளில் தேவையற்ற தலையீடு மற்றும் சுகாதார அமைச்சால் கொரோனா தொற்றாளர்களின் சடலங்களை அகற்றுவது குறித்து நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழுவின் தலைவருக்கு அழுத்தம் விடுக்கும் அமைச்சரின் செயற்பாட்டை, நீதிமன்ற வைத்திய நிறுவனத்தின் வைத்தியர்கள் வன்மையாகக் கண்டிப்பதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நீதியமைச்சர் அலி சப்ரியை அப்பதவியில் இருந்து உடனடியாகப் பதவி நீக்கி கைதுசெய்ய வேண்டுமென அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# 25 மாவட்டங்களுக்கும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள்

(கொழும்பு)

நாடு முழுவதுமான கொவிட் கட்டுப்பாட்டுப் பணிகளின் அவசரத் தேவையைக் கருத்தில் கொண்டு பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானியும் இராணுவத் தளபதியும் கொவிட்-19 பரவலை தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வாவின் சிபார்சின் பேரில் ஜனாதிபதி செயலகம் நேற்று முதல் அனைத்து மாவட்டங்களுக்கும் 25 சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளை ஒருங்கிணைப்பாளர்களாக நியமித்துள்ளது.

அதன்படி, அந்த தலைமை ஒருங்கிணைப்பு அதிகாரிகளின் புதிய நியமனங்கள் மாவட்ட ரீதியான தனிமைப்படுத்தல் மையங்களை சீராக நடத்துவதற்கும் தனிமைப்படுத்துவதற்கும் சிகிச்சையளிப்பதற்கும் தனிநபர்களின் போக்குவரத்து, மருத்துவம், உபகரணங்கள், உலர் உணவு மற்றும் பிற அத்தியாவசிய பொருட்கள் மற்றும் பிற தொழில்நுட்ப தேவைகள் மற்றும் பிற தொழில்நுட்ப தேவைகள் என்பவற்றை சீராக முன்னெடுப்பதற்காகும். (ஜ-4)

# கற்பித்தல் பணிகளுக்கு விமானப்படையினர்

(கொழும்பு)

ஆசிரியர் பற்றாக்குறை உள்ள பாடசாலைகளில் விமானப்படையினரை ஈடுபடுத்த முடியும் என விமானப்படையின் எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன தெரிவித்துள்ளார்.

ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற பாடங்களை கற்பிப்பதற்காக விமானப் படையினரை ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விமானப் படையின் எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன முன்வைத்த யோசனைக்கு கல்வி அமைச்சு இணக்கம் வெளியிட்டுள்ளது. (ஜ-4)

# 3D க்கு தடை


(கொழும்பு)

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களைத் தவிர்ந்த ஏனைய இடங்களிலுள்ள திரையரங்குகள் நேற்று திறக்கப்பட்டுள்ள நிலையில், மீண்டும் மதிப்பாய்வு செய்யும் வரையில் குறித்த திரையரங்குகளில் 3D படங்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் திரைப்படங்களின் இடைநடுவில் வழங்கப்படும் இடைவேளையும் வழங்கப்படாது என அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும் குடும்ப உறுப்பினர்களைத் தவிர்ந்த ஏனையவர்கள் அருகருகே அமர்வதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# புதுவருடத்தை முதலில் வரவேற்றது நியூசிலாந்து




(வெலிங்டன்)

நியூசிலாந்தில் பொதுமக்கள் வண்ண விளக்குகள், வாண வேடிக்கைகள், கலை நிகழ்ச்சிகளுடன் புத்தாண்டை வரவேற்றுள்ளனர்.

சமோவா மற்றும் கிறிஸ்துமஸ் தீவைத் தொடர்ந்து, உலகில் புத்தாண்டை வரவேற்கும் இரண்டாவது நாடாக நியூசிலாந்து பதிவாகியுள்ளது.

இதற்கான முன்னேற்பாடுகளுடன் காத்திருந்த நியூசிலாந்து மக்கள் புத்தாண்டு பிறந்தவுடன் அதை ஒளி வெள்ளத்தால் வரவேற்றுள்ளனர். (நி)

# காசிம் சுலைமானி கொலைக்கு பிரித்தானிய பாதுகாப்பு நிறுவனம் உதவியது

## ஈரான் குற்றச்சாட்டு

(டெஹ்ரான்)

ஈரானின் புரட்சிப்படைத் தளபதி காசிம் சுலைமானி அமெரிக்காவால் கொல்லப்பட்ட நிலையில், இதற்கு பிரித்தானிய பாதுகாப்பு நிறுவனமும் ஜேர்மனியில் உள்ள ஒரு விமானத் தளமும் உதவியிருப்பதாக ஈரானிய சட்டத்தரணி தெரிவித்தார்.

காசிம் சுலைமானி கொல்லப்பட்டு ஓராண்டு நிறைவடையவுள்ள நிலையில் இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டுள்ளது.



ஊடக சந்திப்பொன்றில் குறிப்பிட்டுள்ள சட்டத்தரணி அலி அல்காசிமெர், லண்டனை தளமாகக் கொண்ட பாதுகாப்புச் சேவை நிறுவனமான ஜி-4 எஸ் (G4S), சுலைமானியைக் கொன்றதில் பங்கு வகித்ததாகத் தெரிவித்தார்.

இந்த நிறுவனத்தின் முகவர்கள் தளபதி சுலைமானி மற்றும் அவரது சக போராளிகளின் தகவல்களை பயங்கரவாதிகள் விமான நிலையத்திற்குள் நுழைந்தவுடன் அவர்களிடம் ஒப்படைத்தனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் இதுகுறித்த ஆதாரங்களை அவர் வெளியிடவில்லை.

இதேவேளை, ஜேர்மனியில் உள்ள ஒரு அமெரிக்க விமானத் தளம், சுலைமானி மீதான தாக்குதலுக்கு அமெரிக்கப் படைகளுக்கு உதவியதாகவும் இந் நிலையில், இந்தப் படுகொலை குறித்து விசாரிக்க ஈராக், சிரியா, லெபனான், கட்டார், ஜோர்தான் மற்றும் குவைத் ஆகிய நாடுகளுக்கு நீதித்துறை பிரதிநிதித்துவ உரிமைகளை ஈரான் வழங்கியுள்ளதாகவும் சட்டத்தரணி தெரிவித்தார். (நி-4)

# இஸ்லாமிய பயங்கரவாதிகளால் இடிக்கப்பட்ட இந்துக் கோவில்

## சம்பவத்துடன் தொடர்புடையோர் கைது




(பெஷாவர்)

பாகிஸ்தானில் இந்து கோவில் இடிக்கப்பட்ட சம்பவத்தில் 30 இற்கும் மேற்பட்டோரை பொலிஸார் கைது செய்தனர்.

பாகிஸ்தானின் கைபர் பக்துங்வா மாகாணத்துக்கு உட்பட்ட கராக் என்ற பகுதியில் இந்துமத துறவி பரமஹன்ஸ் மகராஜின் சமாதியும் கோவில் ஒன்றும் உள்ளது. இந்துக்களால் மிகவும் புனிதமாகக் கருதப்படும் அந்த கோவிலில் விரிவாக்கப்பணிகள் அண்மையில் நடந்தது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உள்ளூர் முஸ்லிம் மதகுருக்கள் தலைமையில் 350 இற்கும் மேற்பட்டோர் அங்கு குவிந்தனர். அவர்கள் அந்தக் கோவிலில் புதிதாக கட்டப்பட்ட பகுதியை இடித்து தள்ளி சூறையாடினர். மேலும் கோவிலுக்கு அவர்கள் தீயும் வைத்தனர். இந்த பயங்கரச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களில் பலர், ஜம்மியத் உலமா-இ-இஸ்லாம் கட்சி என்ற பயங்கரவாத கட்சியை சேர்ந்தவர்கள் ஆவர்.

அந்த பிராந்தியத்தில் பெரும் அதிர்ச்சியும் இந்துக்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும் ஏற்படுத்திய இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வந்தனர். இதில் நேற்று முன்தினம் 30 இற்கும் மேற்பட்டோரை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (நி-4)

# ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறியது பிரிட்டன்

(லண்டன்)

நான்கு வருடங்கள், 27 வாரங்கள் மற்றும் இரண்டு நாட்களுக்குப் பிறகு நாட்டை பிளவுபடுத்திய வாக்கெடுப்புக்குப் பின்னர் பிரிட்டன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு ஐரோப்பிய ஒன்றியத்தின் சுற்றுப் பாதையில் இருந்து வெளியேறியது.

இது பிரிட்டனை அரசியல் ரீதியாகப் பிரித்து, நவீன காலங்களில் உலக அரங்கில் நாட்டில் மிகப்பெரிய மாற்றத்தை கொண்டு வந்துள்ளது.

பிரிட்டனின் வெளியேற்றமானது ஒரு சுயாதீனமான உலக சக்தியாக புதிய வாய்ப்புகளைத் தொடர நாட்டை விடுவிக்கும் என்று ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

சர்ச்சைக்குரிய 2016 ஜூன் மாத வாக்கெடுப்பில் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகுவதற்கு ஆதரவாக பெரும்பான்மையான பிரிட்டன்கள் வாக்களித்த நான்கு ஆண்டுகளுக்கு பின்னர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 11 மணியளவில் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. (நி-4)

# சீனாவில் பொதுமக்களுக்கு தடுப்பூசி இலவசம்

(பீஜிங்)

சீனாவில் அனைத்து பொது மக்களுக்கும் கொரோனாத் தடுப்பூசி இலவசமாகப் போடப்படும் என தேசிய சுகாதார ஆணையத்தின் துணை அமைச்சர் ஜெங் யிக்சின் தெரிவித்துள்ளார்.

சீன தயாரிப்பான சினோஃபார்ம் தடுப்பூசி உருவாக்கிய நாட்டின் முதல் உள்நாட்டு கொரோனா வைரஸ் தடுப்பூசிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக ஜெங் யிக்சின் கூறுகையில், 'சீனாவில் அனைவருக்கும் இலவசமாக கொரோனாத் தடுப்பூசி போட திட்டமிட்டுள்ளோம். முடிந்த வரை அந்தத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளும் உடல் தகுதி படைத்த அனைவருக்கும் பல்வேறு கட்டங்களில் தடுப்பூசி செலுத்தி கொரோனாவுக்கு எதிரான எதிர்ப்பாற்றல் அணை எழுப்பப்படும்' என அவர் தெரிவித்தார். (நி-4)

# 500 இற்கும் மேற்பட்ட தடுப்பூசிகள் நாசம் செய்த மருந்தாளர் கைது

(வோஷிங்டன்)

அமெரிக்காவின், விஸ்கான்சின் வைத்தியசாலை மருந்தாளர் ஒருவர் 500 க்கும் மேற்பட்ட கொவிட்-19 வைரஸ் தடுப்பூசி டொஸ்களை நாசப்படுத்திய குற்றச்சாட்டுக்காக கைது செய்யப் பட்டுள்ளார். சந்தேக நபர் வேண்டுமென்றே 500 க்கும் மேற்பட்ட தடுப்பூசி டொஸ்களை நாசப்படுத்தியுள்ளமை வைத்தியசாலை விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் கடந்த வாரம் மில்வாக்கியின் வடக்கே கிராப்டனில் உள்ள அரோரா மருத்துவ மையத்தில் இடம்பெற்றுள்ளது. குறித்த மருந்தாளரை நேற்றுமுன்தினம் கைதுசெய்த கிராப்டன் பொலிஸார், அவரது பெயர் விபரங்களையும், தடுப்பூசிகளை நாசம் செய்தமைக்கான காரணம் என்னவென்பதையும் வெளியிடவில்லை. இவர் ஏற்படுத்திய இந்த சேதமானது 8,000 - 11,000 டொலர் வரை இருக்கும் என்று பொலிஸார் மதிப்பிட்டுள்ளனர். (நி-4)

# கருத்துக் கணிப்பில் முதலிடம் பிடித்த ட்ரம்ப், மிச்செல்

(வோஷிங்டன்)

2020 ஆம் ஆண்டின் போற்றப்படும் நபர்களுக்கான பட்டியலில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், முன்னாள் ஜனாதிபதி ஒபாமாவின் மனைவி மிச்செல் ஒபாமா ஆகியோர் முதல் இடத்தைப் பிடித்துள்ளனர்.

2020 ஆம் ஆண்டின் போற்றப்படும் நபர்களைத் தேர்வு செய்வதற்கான கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. டிசெம்பர் முதலாம் திகதி முதல் 17 ஆம் திகதி வரையில் தொலைபேசி வாயிலாக இந்த கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. இதில் 1,018 பேர் கலந்து கொண்டனர்.




இதில் 2020 ஆம் ஆண்டில் போற்றப்படும் நபர்களின் பட்டியலில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 39 சதவீத ஆதரவுடன் முதல் இடம் பிடித்துள்ளார்.

12 ஆண்டுகளாக இந்தப் பட்டியலில் முதல் இடம் பிடித்திருந்த முன்னாள் ஜனாதிபதி ஒபாமாவை பின்னுக்குத் தள்ளி ட்ரம்ப் முதல் இடம் பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல், பெண்களுக்கான பட்டியலில் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா மனைவி மிச்செல் ஒபாமா 10 சதவீதம் ஆதரவு பெற்று முதல் இடம் பிடித்துள்ளார். தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக மிச்செல் ஒபாமா முதல் இடம் பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்க து. (நி-4)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—225

# புதுவருடமும் ஆட்கொல்லி நோய்களுடன் ஒன்றிய வாழ்வும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

அனைவருக்கும் 2021 ஆம் வருட புதுவருட வாழ்த்துக்கள்!

எது நடந்ததோ நன்றாகவே நடந்தது. எது நடக்க இருக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கும். பகவத்கீதையில் பகவான் கண்ணன் அருளுரைத்தது இன்று நடந்து கொண்டிருக்கின்றது.

ஆக்கலாம், காக்கலாம், அழிக்கலாம் என்றிருக்கும் மாந்தர் குலத்திற்கு இறைவன் செய்யும் திருவிளையாட்டுக்களாகவே தற்போதைய கொரோனா வைரஸும் அதனுடன் இணைந்திருக்கும் ஏனைய மனிதனைத் தாக்கும் நோய்களுமாகும். பணிவும் அர்ப்பணிப்பும் அன்பும் ஆதரவும் அனைத்து உள்ளங்களிலும் இருந்து அனைத்து மக்களுக்காகவும் நாம் பணி செய்தல் வேண்டும் என்பதனை மிகவும் இலகுவாக ஒரு நுண்ணுயிரி அனுபவித்துப் பார் எனக் காட்டியிருக்கின்றது. ஒற்றுமையின்மையை அனைத்திலும் நாம் காண முடிகின்றது. மனித குலத்தினை அழிக்கப்புறப்பட்ட வைரஸுக்கெதிராக நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டியிருக்கின்றது.

உயர்ந்தெழுந்த கட்டடங்களில் விழாக்களைக் கொண்டாடாமல் தனித்திருந்து கொண்டாடு எனவும் கூட்டங்களைத் தவிர்த்து காரியத்தில் கண்ணாயிரு என்னும் தோரணையில் அனைத்து சந்திப்புக்களையும் நிகழ்த்தி முடிக்கும் பாங்கு ஒரு நுண்ணுயிரி கட்டளையையும் இட வைத்து காட்டியும் இருக்கின்றது. அகந்தை அகன்று நாம் அனைவரும் சமம் என்பதனை இதைவிட யார் இவ்வளவு சுலபமாக காட்டி விட முடியும்.

திருநெல்வேலியில் விற்பனைக்கு வந்த மரக்கறிகள் இரு மாடிகளைக் கொண்ட சந்தைக்குச் செல்லாமல் வீதியோரம் உடனடிச் சந்தைகளாக பாதை நெடுகிலும் இருக்கின்றதனைப் பார்க்கின்றபோது சந்தைப்படுத்தலுக்கு இவ்வாறான கட்டடங்கள் எதற்கு என்னும் வினாவும் எழுகின்றது. விவசாயப் பெருமக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த முடியாமல் ஆங்காங்கே அவற்றை வைத்து விற்பனை செய்ய வேண்டியிருக்கின்றது. மக்கள் அதிகமாக நெருக்கமாக கூடாமல் இருப்பதற்கான வழியாக இது இருப்பினும் உற்பத்தியாளனது பக்கத்திலிருந்து பார்க்கும் போது அவர்களின் சந்தைப்படுத்தலை இன்னும் திட்டமிட்டு செயற்படுத்த வழிவகைகள் செய்யப்படல் வேண்டும். விவசாயப் பெருமக்கள் நட்டமடையாமல் சந்தைப்படுத்தல் நடைபெறுவதற்கான வழிவகைகள் விரைந்து காணப்படல் வேண்டும்.

இந்த நிலைமை தொடருமானால் சந்தைப்படுத்துவதற்கான செயற்பாடுகளை சுகாதார நடைமுறைகளுக்கூடாக செய்வதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு உற்பத்திப் பொருட்களை பழுதடையாமல் சந்தைப்படுத்த ஆவன செய்யப்படல் வேண்டும்.

இம்மாதங்களில் மழை பெய்யும் காலமாதலால் மரக்கறிப் பயிர்கள் பழுதடைவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகும். இப்படியிருக்கையில் உற்பத்திப் பொருட்களை தற்காலிக இடங்களில் தொடர்ந்து சந்தைப்படுத்த முடியாது.

நிலைமை ஓரளவிற்கு சீராகும் வரைக்கும் சந்தைப்படுத்துவதற்கான மாற்று வழிவகைகளை உருவாக்க வேண்டியது அவசியமாகும். நடமாடும் சேவைகளைப் பயன்படுத்துவதற்கான வழிவகைகளை உருவாக்கலாம்.

ஆனால் அவற்றை அவசியம் கண்காணிப்பிற்குள் வைத்திருக்க வேண்டும். அல்லது அந்தந்த உற்பத்தியாளனை குறிப்பிட்ட பகுதி கடைகளுக்கு பொருட்களை விநியோகிப்பதற்கான நடைமுறைகளை உருவாக்கலாம். ஒரு ஒழுங்கு முறைக் கட்டமைப்பை அனைத்து உற்பத்தியாளர்கள் மற்றும் கடை முதலாளிகளுடன் கலந்துரையாடி முறையான தீர்வினை பரிந்துரைக்கலாம்.

மருதனார்மடம் சந்தையினை திறந்து விடுவது நோயின் பரவலை இன்னும் அதிகரிக்கும் என்பதில் சுகாதாரத்துறையின் கருத்துக்கள் முக்கியமானவை. இது மருதனார்மடம் சந்தைக்கு மட்டுமல்ல ஏனைய சந்தைகளுக்கும் பொருத்தப்பாடானவை.

இச்சந்தைக்கு வருவோர் கவனயீனமாக இருந்ததனாலும் முறையான சுகாதார நடைமுறைகளை கடைப் பிடிக்காததாலும் தொற்று ஆரம்பிக்க ஏதுவானது. முறையான சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்காவிட்டால் ஏனைய சந்தைகளிலிருந்தும் நோய்த்தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமே.

இந்நிலையில் ஏனைய சந்தைகளிலிருந்தும் தொற்று ஏற்படாமலிருக்க சுகாதாரத் துறையின் முன்னேற்பாடான வருமுன் காப்பதற்கான நடவடிக்கைகளுக்கு நாம் அனைவரும் ஒத்துழைத்தல் அவசியமானதாகும்.

கண்ணுக்குத் தெரியாத வைரஸ் நோயின் பிரமாணத்தை நாம் கண்டும் அனுபவித்தும் வாயடைத்து நிற்கையில் இன்னொரு பூஞ்சண நுண்ணங்கியின் பரவலும் நோயின் விஸ்தீரணமும் அனைவரையும் ஏங்க வைத்திருக்கின்றது. இதெல்லாம் இறைவனின் சோதனையென்று நாம் கூறி ஆறுதல் பட்டுக் கொண்டாலும் நாம் அவதானமாக மிகக் கவனமாக இருக்க வேண்டியிருக்கின்றது என்பதனை இந்நாளில் அடித்துக் கூறியிருக்கின்றது.

வருமுன் காத்தல் அவசியம் என்பது சுகாதாரத் துறை எமக்கு மீண்டும் மீண்டும் அறிவுறுத்திக் கொண்டிருக்கையில் எம்மை நாம் காப்பாற்றிக் கொள்ள நிச்சயமாக சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்தல் அவசியமாகும். இந்நிலையில் இவ்வாறான இடர்களுக்கூடாக நாம் தொடர்ந்து பயணிப்பதற்கான வழிவகைகளைக் இனங்கண்டு உற்பத்தியாளனும் பாதிக்கப்படாத வகையில் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த ஆவன செய்தல் அவசியமானதாகும். கொரோனாவின் பாதிப்பு வெளிநாடுகளில் இன்னும் அதிகரித்த நிலைமையில் இருக்கும் போது நாம் கவனயீனமாக இருக்காது தொடர்ந்தும் தனிமனித பாதுபாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு என்பனவற்றை அனைவரும் கவனத்திற் கொள்ளல் அவசியமானதாகும்.

விவசாய பெருமக்களின் உற்பத்திப் பொருட்களுக்கு சிறந்த விலையைப் பெற்றுக்கொடுப்பதும் அவசியமானதாகும்.

புதிய வருடத்தில் உற்பத்தியாளன் பாதிக்கப்படாமலிருப்பதற்கான அனைத்து வழி வகைகளையும் நாமே உருவாக்கி அவர்களின் உற்பத்தி வீழ்ச்சியிலிருந்து காப்பாற்றுதல் மிகவும் அவசியமானதாகும்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 308



# சுகாதாரப் பிரிவு சமிக்ஞை காட்டினாலே பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகள்

(கொழும்பு)

**விளையாட்டுப் போட்டிகள் மற்றும் அது சார்ந்த விடயங்களுக்கு சுகாதாரப் பிரிவு பச்சை சமிக்ஞை காட்டினால் மாத்திரமே, அனுமதி வழங் கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 11ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கப் பட்டாலும், குறித்த பாடசாலைகளில் எவ்விதமான விளையாட்டுப் போட்டிகளுக்கும் இல்லப் போட்டிகளுக்கும் அனுமதி வழங்கப்படாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளை மீளத் திறப்பது குறித்து, சுகாதாரப் பிரிவினருடன் கலந்தாலோசித்த பின்னரே தீர்மானிக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)



## புதுவருட விருந்துக்கு சென்றவர் சடலமாக மீட்பு

(கொழும்பு)

2021 புதுவருட விருந்துக்கு சென்ற நான்கு பிள்ளைகளின் தந்தை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

2021 புதுவருடத்தை முன்னிட்டு சக நண்பர்களோடு மதுபான பார்ட்டிக்கு நேற்று முன்தினம் இரவு வீட்டிலிருந்து சென்ற நிலையில் மீண்டும் வீட்டிற்கு வராதமையினால் தேடிய போதே தேயிலை மலையில் இறந்த நிலையில் கிடந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

# நைஜீரியர்களால் ஆபத்து அவதானமாக இருங்கள்



(கொழும்பு)

சமூக வலைத்தளங்கள் மற்றும் அலைபேசிகள் ஊடாக வெளிவரும் போலியான செய்திகளை நம்பி மக்கள் ஏமாற வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டுள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண எச்சரிக்கையுடன் இருக்குமாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் நைஜீரிய நாட்டவர்கள் இவ்வாறான மோசடி வேலைகளில் ஈடுபட்டுள்ள நிலையில் இதுவரை 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டுமென தெரிவித்துள்ள அவர் பண மோசடிகளில் இவர்கள் ஈடுபட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# விவசாயத்திற்கே முன்னுரிமை

## ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

தன்னுடையதும் அரசாங்கத்தினதும் பிரதான கொள்கை விவசாயத் துக்கு முன்னுரிமை அளிப்பதே என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கெப்பிட்டிகொல்லாவ -கணுகஹவெவ கிராமத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

விவசாயத்தை தமது ஜீவனோபாயமாகக் கொண்ட மக்களின் நாளாந்த பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்பட வேண்டாம் எனவும் ஜனாதிபதி இதன் போது அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், அரச அதிகாரிகளின் முழுமையான ஆதரவு மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இந்த ஆண்டின் கூகுள் வரைபடத் தின்படி வனப்பகுதிகளாக அடையாளம் காணப்பட்ட இடங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளை உடனடியாக, விவசாய நடவடிக்கைகளுக்காக பொதுமக்களுக்கு வழங்குமாறும் பணிப்புரை விடுத்துள்ளார். (ஜ)




சுதாமதி




குவேதா




தேனுஜன்




கீதப்பிரியன்




சுவர்ணா




கௌதமி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மக்கள் ஆணைக்கு எதிராக அரசு ஒருபோதும் செயற்படாது

## புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி

(கொழும்பு)

மக்கள் ஆணைக்கு எதிராக அரசாங்கம் ஒருபோதும் செயற்படாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



புத்தாண்டு தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "புத்தாண்டின் விடியல், கடந்து செல்லும் ஒவ்வொரு தருணத்திலும் நாம் எதிர் நோக்கும் சவால்களை சரியாகப் புரிந்துகொண்டு வாழ்க்கையைத் திட்டமிடுவதற்கும், உறுதியுடன் முன்னேறுவதற்கும் எம்மை ஊக்குவிக்கின்றது.

எனவே, மக்கள் ஆணைக்கும் எதிராக அரசாங்கம் ஒருபோதும் செயற்படாது. ஒரு நேர்மறையான மனப்பாங்குடனும், திடவுறுதி மற்றும் அர்ப்பணிப்புடனும் நாம் வரவேற்கிறோம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் நோய்த்தொற்றினை வெற்றிகொள்ள முழு உலகுடனும் இணைந்து நாமும் முன்னிலை வகித்துள்ளோம்.

கடுமையான சவால்கள் மற்றும் தடைகளுக்கு மத்தியிலும், தேசிய அபிலாஷைகளின் அடிப்படையில் நிலையான அபிவிருத்திக்கு அடித்தளம் அமைக்க எமக்கு முடிந்தது.

மக்களின் எதிர்பார்ப்புகளை அடைந்துகொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை புதிய ஆண்டில் மேலும் வலுப்படுத்த அரசாங்கம் தயாராக உள்ளது.

மக்களை மையமாகக் கொண்ட அபிவிருத்தி மற்றும் தேசிய தனித்துவத்தைப் பாதுகாக்கும் எதிர்பார்ப்புடனேயே புதிய அரசாங்கம் உருவாக்கப்பட்டது.

நாட்டுக்கும் மக்கள் ஆணைக்கும் எதிராக அரசாங்கம் செயற்படாது என்ற அரசாங்கத்தின் மீதான மக்கள் நம்பிக்கை வீண்போக நாம் இடமளிக்க மாட்டோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் அஞ்சத் தேவையில்லை

(கொழும்பு)

மாகாணசபை தேர்தலை நடத்துவதற்கு அஞ்ச வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. அதற்கான உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றன. தேர்தலில் பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெறும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் குறித்து வினவிய போது இதனைத் தெரிவித்தார்.

மாகாண சபை தேர்தலை நடத்தினால் அரசாங்கம் நிச்சயம் வெற்றி பெறும். ஆகவே தேர்தலை கண்டு அஞ்ச வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. மாகாண சபை தேர்தல் குறித்து தற்போது முரண்பாடு தோற்றம் பெற்றுள்ளமைக்கு கடந்த அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும்.

மாகாண சபை தேர்தலை உரிய காலத்தில் நடத்த நல்லாட்சி அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

அரசியல் நோக்கங்களுக்காக மக்களின் ஜனநாயக உரிமை மறுக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ காலத்தில் தேர்தல்கள் ஏதும் பிற்போடப்படவில்லை. மாறாக தேர்தல்கள் உரிய காலத்துக்கு முன்னரே நடத்தப்பட்டுள்ளன.



மாகாண சபைத் தேர்தல் நடத்தினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தோல்வியடையக் கூடும் என்பதை நன்கு அறிந்தும் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டது.

மாகாணசபை உரிமைகளை கடந்த அரசாங்கம் பாதுகாக்கவில்லை. மாகாணசபை தேர்தல் மாத்திரமல்ல தேசிய தேர்தல்களை உரிய காலத்தில் நடத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. இந்தப் பத்திரம் குறித்து கட்சி தலைவர் கூட்டத்தில் கலந்தாலோசித்து தீர்மானம் எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# 2600 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வரவுள்ளனர்

(கொழும்பு)

சிவில் விமானப் போக்குவரத்து ஆணையம் மற்றும் பிற பங்குதாரர்களுடன் இணைந்து சுற்றுலாத் துறையினரால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு மாத பைலட் திட்டத்தின் கீழ் உக்ரேனிலிருந்து சுமார் 2600 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

இந்தத் திட்டம் ஜனவரி 19 ஆம் திகதிமுடிவடையும் என்று சிவில் விமானப் போக்குவரத்து வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த டிசெம்பர் 28 ஆம் திகதி முதல் தொடங்கப்பட்ட பைலட் திட்டம் ஏற்கனவே 300க்கும் மேற்பட்ட உக்ரேனிய சுற்றுலாப் பயணிகளை வரவேற்றுள்ளது.

எந்தவொரு சுற்றுலாப் பயணிகளும் தங்கள் இடங்களுக்கு அழைத்துச் செல்லும் போது தங்கள் ஹோட்டல்களை விட்டு வெளியேறவோ அல்லது பேருந்துகளில் இருந்து வெளியேறவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள். (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வெற்றியின் ரகசியம்!

வேலைக்குப் போகின்ற சில பெயரை விசாரித்துப் பாருங்கள். ஏண்டா இந்த வேலைக்கு வந்தோம் என்று இருக்கு என்று சொல்லி அலுத்துக் கொள்கின்றவர்கள் பல பேர் இருப்பார்கள்.

எனக்கு என் வேலை மிகவும் பிடித்திருக்கின்றது என்று சொல்கின்றவர்கள் சிலபேர் தான் இருப்பார்கள்.

ஒருத்தனுக்குப் பிடித்தமான பொழுது போக்கே அவனுடைய தொழிலாக இருந்துவிட்ட தென்றால்.. அவனை மாதிரி கொடுத்து வைத்தவன் வேறு யாரும் கிடையாது..என்றாராம் பேரறிஞர் பெர்னாட்ஷா.

நீங்கள் ஒரு அலுவலகத்திலே,வேலை பார்த்தாலும் சரி... தனியார் நிறுவனத்திலே வேலை பார்த்தாலும் சரி... ஒரு முதலாளியிடம் வேலை பார்த்தாலும் சரி... உங்கள் துறையில் வெற்றிகரமாக இருக்கின்ற சில பேரைப் பார்த்து...

உங்கள் வெற்றியின் இரகசியம் என்ன என்று கேட்டுப் பாருங்கள்..அநேகமாக எல்லோரும் சொல்கின்ற பதில் என்ன தெரியுமா? எனக்கு நான் செய்கின்ற வேலை மிகப் பிடித்திருக்கின்றது என்பது தான்.. சரி.. அது மாதிரி மற்றவர்களாலேயும் வெற்றிகரமாக செயல்பட முடியுமா?

முடியும் என்கின்றார்கள் சில நிபுணர்கள்.எந்தச் சூழலையும் எங்கள் கட்டுப்பாட்டிலே வைத்துக் கொள்ள கற்றுக் கொண்டால் போதுமாம். அதற்கு அவர்கள் ஆறு வழிகள் சொல்கின்றார்கள்.

முதலில்.. உங்கள் மேலதிகாரி...அல்லது முதலாளி எதிர்பார்ப்புக்குத் தகுந்த மாதிரி உங்கள் வேலை இருக்கா இல்லையா என்பதைப் பாருங்கள்..அப்படி இல்லை என்றால் அதை சரி செய்யுங்கள்.

அடுத்தபடியாக உங்களுக்கு மேலே பணி புரிகின்றவர்கள். உங்களுக்குக் கீழே பணி புரிகின்றவர்கள் எல்லோரிடமும்..உங்கள் பழக்கவழக்கம் நல்லபடியாக இருக்கின்றதா என்று பாருங்கள்..அப்படி இல்லை என்றால் அதையும் சரி செய்யுங்கள்.

உங்கள் பேரிலே மற்றவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும்..நீங்கள் எந்த முடிவு எடுத்தாலும் அது நல்ல முடிவா இருக்கின்றது என்கின்ற எண்ணம் மற்றவர்களுக்கு வரவேண்டும். அது மாதிரி நீங்கள் நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் உடம்பு நல்லா இருக்க வேண்டும்.உங்கள் மனதும் நன்றாக இருக்க வேண்டும். இது இரண்டும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். அழகாக இருக்க வேண்டும். ஆககூடிய உங்கள் தோற்றத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது மிக அவசியம்.

நீங்கள் எங்கே வேலை செய்தாலும் சரி... உங்கள் நிர்வாகம் செயற்படும் விதம் எப்படி என்பதை நன்றாக புரிந்து வைத்திருக்க வேண்டும்.உங்கள் நிர்வாகம் இப்பொழுது செய்வதை ஏன் செய்கின்றது. அதன் குறிக்கோள் என்ன..அது நீடிக்கக் காரணம் என்ன..இவை எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

உங்களுடைய வேலைச் சூழலைக் கட்டுப்பாட்டிலே வைத்திருக்கிறதற்கு இதெல்லாம் சிறந்த வழிகள்.

இதைத் தவிர..எல்லாவித வேலைகளுக்கும் பொருந்தக்கூடிய சில வெற்றி இரகசியங்களும் உண்டு.அது என்னவென்றால்.... ஆக்கபூர்வமான செயல் ஆக்கபூர்வமான முடிவைத் தரும்.நன்றாகச் சிரியுங்கள்..அப்பத் தான் அது திரும்பிக் கிடைக்கும்.எதையும் முன்னின்று செய்வதற்கு ஆர்வம் காட்டுங்கள்..உங்கள் கடந்தகால தோல்வியால் ஏற்படும் மனச்சோர்வு..உங்களை முட்டுக்கட்டையாக இருக்க முயற்சி செய்யும். அதைத் துரத்தி விடுங்கள்.

உங்களுக்கு ஒரு பொறுப்பான வேலை கிடைத்து விட்டது என்றால் உடனே சத்தம் போட்டு குழப்பத்தை உண்டு செய்து சூழ்நிலையை டென்ஷன் ஆக்கிடாதீர்கள்..நீங்கள் எந்தச் சூழலையும் திறமையாகக் கையாளக் கூடியவர்கள் என்பதை நிரூபிக்க வேண்டும்.. அது தான் முக்கியம்.

இது எல்லாம் தான் இரகசியம்...ஒருத்தர் சொன்னார்.

நான் இந்த வேலையில் சேர்ந்ததில் இருந்து இதுவரைக்கும் ஒரு தடவை கூடலீவே எடுத்ததில்லை சேர்.. என்றார். எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. நீங்கள் இந்த வேலையில் சேர்ந்தது எப்பொழுது என்று கேட்டேன். இன்றைக்குக் காலையில் 8 மணிக்கு சேர்ந்தேன்.. அப்படி என்றார்.

# நாடுகளின் ஆட்புல எல்லைகளும் இலங்கையின் எல்லையோரக் கடல் எல்லை நிர்ணயமும்

01

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



### நாட்டின் எல்லைகள்

பரந்து விரிந்த இந்த அண்டத்தில் ஒரு அழகிய படைப்பு இப்புவுலகம். இந்த பால்வெளி மண்டலத்தில் அழகிய நீல நிற உருளையான பூமி தன்னுள்ளே இயற்கையாக பல நிலப்பரப்புகளையும் எல்லைகளையும் உருவாக்கி வைத்துள்ளது. எனினும் மனிதர்கள் வளர்ந்து இனக்குழுக்களாக பிரிந்து தமக்கென எல்லைகளை வகுத்துக் கொண்டனர். இன, மொழி அடிப்படையில் நாடுகள் உருவான போது மனிதன் அதற்கென எல்லைக்கோடுகளை வரைந்தான். சிலசமயம் அது சுமுகமாகவும் சிலசமயம் அது பெரும் போராட்டத்தின் விளைவாகவும் இருக்கும். இப்படி வரையப்பட்ட எல்லைக் கோடுகள் ஏராளம்.

வரலாற்று ரீதியாக, சீன மற்றும் ரோமானிய சாம்ராஜ்யங்கள் போன்ற பெரிய சாம்ராஜ்யங்களும், பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி போன்ற மையப்படுத்தப்பட்ட மற்றும் வளமான தேசிய அரசுகளும் மட்டுமே தங்கள் எல்லைகளை அண்டைய நாடுகளுடன் செயற்படுத்த முயற்சித்தன. புவியியல் ரீதியாக, சர்வதேச எல்லைகள் பலவிதமான தீவிரத்தன்மையில் வெளிப்படுத்தப்படுகின்றன.

எல்லைத்தூண்கள், கடவுச்சீட்டு முறைமை, விசாக்கள் வழங்கும் முறைமை மற்றும் குடியேற்றக்கட்டுப்பாடுகள், வேலிகள், சுவர்கள், எல்லைக் காவலர்கள் மற்றும் தேசிய இராணுவத் துருப்புக்களை நிலைநிறுத்தல் போன்ற பல வழிகளில் ஒவ்வொரு நாடும் தமது எல்லைகளைப் பாதுகாக்கின்றன.

### ஒரு நாட்டின்ஆட்புல எல்லை

ஒரு நாட்டின் அதிகார வரம்பு (State Jurisdiction) செயற்படும் நிலப்பகுதியே அந்நாட்டின் ஆட்புல எல்லை ஆகும் எனலாம். அது போல ஒரு நாட்டு அரசின் இறையாண்மை (Sovereignty) அதிகாரம் செலுத்த இயலக்கூடிய நிலப்பகுதியே நாட்டின் ஆட்புல எல்லை எனவும் கூறலாம்.

### ஒரு நாட்டின் ஆட்புல இறையாண்மை

ஆட்புல இறையாண்மை என்பது, ஒரு நாடு தன் நாட்டின் ஆட்புல எல்லைக்குள் இருக்கும் அனைத்து மக்கள் மீதும் சொத்துக்கள் மீதும் கொண்டிருக்கும் தனிப்பட்ட முழுமையான கட்டுப்படுத்தும் அதிகாரம் ஆகும். வேறு எந்தவொரு நாடும் அக்கட்டுப்பாட்டில் தலையிட முடியாதவாறு அந்நாடு கொண்டிருக்கும் அதிகார வரம்பே ஆட்புல இறையாண்மை எனலாம். ஆட்புல இறையாண்மையின் இன்னொரு அம்சம், அனைத்து நாடுகளும் சமமானவை என்பதாகும்.

> **ஆட்புல இறையாண்மை என்பது, ஒரு நாடு தன் நாட்டின் ஆட்புல எல்லைக்குள் இருக்கும் அனைத்து மக்கள் மீதும் சொத்துக்கள் மீதும் கொண்டிருக்கும் தனிப்பட்ட முழுமையான கட்டுப்படுத்தும் அதிகாரம் ஆகும். வேறு எந்தவொரு நாடும் அக்கட்டுப்பாட்டில்தலையிட முடியாது**

வெவ்வேறு அளவுகளிலான நிலப்பகுதி, மக்கள்தொகை அல்லது பொருளாதார வலிமையைக் கொண்டவையாக இருந்தாலும் சர்வதேசச் சட்டத்தில் அனைத்து நாடுகளும் சமமானவையே. சர்வதேசச் சட்டத்தில் அனைத்து நாடுகளும் சமமானவை என்பதால் ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கு மற்ற நாடுகள் எதற்கும் உரிமை கிடையாது.

நடைமுறை வழக்கின் அடிப்படையில் ஆட்புல இறையாண்மை என்பது, எந்தவொரு நாடும் மற்றொரு நாட்டின் உள்நாட்டுச் செயற்பாடு ஒன்றை நிறுத்துமாறு உத்தரவிட முடியாது. அதனால் தனக்கோ பொதுவாக மனித சமுதாயத்திற்கோ பாதிப்பு ஏற்படும் மற்ற நாடுகள் கருதினால் அந்நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்தலாம் அல்லது ஐ.நா. சபையின் மூலம் தடுத்து நிறுத்த முயலலாம். மாறாக, ஒரு நாடு தன்னைப்போன்ற சமதகுதி உள்ள நாடு ஒன்றின் செயலை தன் உத்தரவின் மூலம் தடுத்து நிறுத்த முடியாது.

> **உலகமயமாக்கல் (Globalization) வந்த பிறகு நாட்டின் இறையாண்மை பற்றிய கண்ணோட்டம் பெரும் மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது. மனிதவுரிமைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்றவை உலக பொது விவகாரங்களாகிவிட்டன. இவற்றை மீறும் வகையில் ஒரு நாடு உள்நாட்டில் செயற்பட்டாலும் உலக நாடுகள் அதில்தலையிடலாம்அல்லதுஉள்நாட்டின் மனிதவுரிமை மீறல்களை கண்காணிக்கலாம். ஒரு நாட்டின் குடிமகளின் அடிப்படை உரிமைகள் அந்த நாடு மட்டும் சம்பந்தப்பட்ட விடயம் என்ற நிலையில் இருந்து மாறி, அது உலக சமுதாயத்தின் பொறுப்பு என்ற நிலைக்கு வளர்ச்சியடைந்துள்ளது.**

ஆனால் உலகமயமாக்கல் (Globalization) வந்த பிறகு நாட்டின் இறையாண்மை பற்றிய கண்ணோட்டம் பெரும் மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது. மனித உரிமைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்றவை உலக பொது விவகாரங்களாகிவிட்டன. இவற்றை மீறும் வகையில் ஒரு நாடு உள்நாட்டில் செயற்பட்டாலும் உலக நாடுகள் அதில் தலையிடலாம் அல்லது உள்நாட்டின் மனித உரிமை மீறல்களை கண்காணிக்கலாம். ஒரு நாட்டின் குடிமகளின் அடிப்படை உரிமைகள் அந்த நாடு மட்டும் சம்பந்தப்பட்ட விடயம் என்ற நிலையில் இருந்து மாறி, அது உலக சமுதாயத்தின் பொறுப்பு என்ற நிலை க்கு வளர்ச்சியடைந்துள்ளது.

> **ஆட்புல கடல் பிரதேசத்திற்குட்பட்ட நில, வான், கடல் என்பனவும் அவற்றினுள்ளே அடங்கியுள்ள அத்தனையும் அந்நாட்டுக்குரியதாகும். இந்த ஆட்புல கடற் பிரதேசத்தில் தீவுகள், மணற்றடைகள், கற்பாறைகள் ஆகிய தரைத்தோற்ற அம்சங்களும் உள்ளடங்கும்.**

### ஒரு நாட்டின் ஆட்புல எல்லையின் கூறுகள் (Parts of State Territory)

ஒரு நாட்டின் ஆட்புல எல்லை என்பது அதன் நிலப்பரப்பை மட்டும் குறிப்பதல்ல. மாறாக அந்நாட்டில் உள்ள நீர்நிலைகளையும் சர்வதேச நீர்நிலைகளில் உள்ள உரிமைகளையும் உள்ளடக்கியதாகும். எனவே ஒரு நாட்டின் ஆட்புல எல்லையின் கூறுகளாக பின்வருவனவற்றை கூறலாம்:- 1. எல்லைகள், 2. தேசிய நீர் நிலைகள், 3. எல்லையோர நீர்நிலை கள் மற்றும் 4. வான் எல்லை

### 1.நாட்டின் எல்லைகள் (Boundaries)

நாட்டின் எல்லைகள் என்பது, ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டின் ஆட்புல எல்லைகளைப் பிரிக்கின்ற வகையில் பூமியின் மேற்பரப்பில் வரையப்படும் கற்பனையான கோடுகளே என்று ஸ்டார்க் வரையறுக்கின்றார். நாட்டின் எல்லைகளை சம்பந்தப்பட்ட நாடுகள் அது குறித்த உடன்படிக்கைகள் மூலமாகவோ அல்லது நடைமுறை ஒப்புதல் மூலமாகவோ அங்கீகரிக்கின்றன.

> **நாட்டின் எல்லைகள் என்பது, ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டின் ஆட்புல எல்லைகளைப் பிரிக்கின்ற வகையில் பூமியின் மேற்பரப்பில் வரையப்படும் (கற்பனையான) கோடுகள். நாட்டின் எல்லைகளை சம்பந்தப்பட்ட நாடுகள் அது குறித்த உடன்படிக்கைகள் மூலமாகவோ அல்லது நடைமுறை ஒப்புதல் மூலமாகவோ அங்கீகரிக்கின்றன.**

நாட்டின் எல்லைகள் (a) இயற்கை எல்லைகள் என்றும் (b) செயற்கை எல்லைகள் என்றும் இரு வகைப்படும். நாட்டின் எல்லைகளாக அமைந்திருக்கும் மலைகள், ஆறுகள், கடற்கரைகள், காடுகள் போன்றவை இயற்கை எல்லைகள் எனப்படும். நாடுகளைப் பிரிக்கும் வகையில் கற்பனையாக பூமியின் அட்ச ரேகை (Latitude) மற்றும் தீர்க்க ரேகை (Longitude)களுக்கு இணையாக வரையப்படும் கோடுகளே செயற்கை எல்லைகள் எனப்படும்.

நாடுகளுக்கு இடையிலான எல்லையாக ஆறு அமைந்திருந்தால் அந்த ஆறு போக்குவரத்துக்குப் பயன்படாத ஆறு எனில் ஆற்றின் நடுவில் எல்லை அமைந்திருப்பதாகக் கருதப்படும். அது மையக் கோடு (Median Line) எனப்படும். அதுவே போக்குவரத்துக்குப் பயன்படும் ஆறு எனில் அதன் ஆழமான போக்குவரத்துப் பாதையின் நடுவில் எல்லைக்கோடு செல்வதாகக் கொள்ளப்படும். அது ஆழ் மையக் கோடு (Thalweg) எனப்படும். இதை படத்தில் பார்த்து விளங்கிக் கொள்ளலாம்.

### நாடுகளின் விசித்திரமான எல்லைகள்

இன்று, உலகெங்கிலும் உள்ள 145 நில அடிப்படையிலான தேசிய அரசுகள் (50 தீவு நாடுகளைத் தவிர) தங்கள் எல்லைகளாக மூன்று முக்கிய சர்வதேச எல்லை வகைகளைப் பயன்படுத்துகின்றன: 15-28 நாடுகள் (8-14 சதவீதம்) திறந்திருக்கும் எல்லைகள் (open borders); 75-88 நாடுகள் (39-45 சதவீதம்) எல்லைகளை ஒழுங்குபடுத்திய அல்லது கட்டுப்படுத்தப்பட்ட எல்லைகள் (regulated or controlled borders) மற்றும் 42 நாடுகளில் (22 சதவீதம்) பலப்படுத்தப்பட்ட (fortified borders) எல்லைகள்உள்ளன.

எல்லை வகைகளை மென்மையான மற்றும் கடினமான எல்லைகளாக (Soft borders and hard borders) வகைப்படுத்தலாம். மென்மையான எல்லைகளில் திறந்த மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட எல்லைகள் அடங்கும். பலப்படுத்தப்பட்ட எல்லைகள் என குறிப்பிடப்படும் கடினமான எல்லைகளில் (hard borders), கம்பிவேலி எல்லைகள் கம்பிவேலி மற்றும் சுவர் எல்லைகள் சுவர் எல்லைகள் மற்றும் இராணுவமயமாக்கப்பட்ட எல்லைகள் அடங்கும்.

(தொடரும்...)

# பாதுகாப்பற்ற முறையில் வீசப்படும் முகக்கவசங்களால் பாதிப்பு

(கொழும்பு)

பயன்படுத்தப்பட்ட பின்னர், பாதுகாப்பற்ற முறையில் வீசப்படும் முகக்கவசங்கள், ஆறுகள், நீரோடைகள் ஊடாகக் கடலில் கலப்பதால், கொரோனா வைரஸ் தொற்றும் அபாய நிலை அதிகரிக்கலாம் என கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

நாளொன்றுக்கு 50 ஆயிரத்திற்கும் அதிகமான முகக்கவசங்கள், கடலில் கலப்பதாகத் தெரிவித்துள்ள அதிகார சபை, இதனால் பொழுது போக்குக்காகக் கடலுக்குச் செல்வோருக்கும் கொரோனாத் தொற்று ஏற்படும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் எச்சரித்துள்ளது.

தினமும் 5 இலட்சம் முகக்கவசங்கள் நாட்டில் பயன்படுத்தப்படும் அதேவேளை பெருமளவு முகக் கவசங்கள் தினமும் வீசப்படுவதாகவும் கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## ஆரோக்கியம் தரும் ஆலய வலம்

(தொடர்ச்சி)

கைகளைக் கூப்பிய நிலையில் தேகமானது நடக்கிறது. ஆக பிரகார வலம் செய்யப்படும் நேரத்தில் இந்த மூன்றும் இணைந்து நடக்கிறது.

இதன்மூலம் நாம் நடந்து கொண்டே தியானம் செய்கிறோம் எனப்படுகிறது. பிரகார வலம் வருதலின் மிக முக்கிய தாத்பரியமாக இது கருதப்படுகிறது. பிரகார வலம் முடிந்ததும் கொடிமரம் அருகில் சற்றுநேரம் அமைதியாக அமர்ந்து இருக்க வேண்டும். இது நமது உடம்பில் பற்றரியில் "சார்ஜ்" ஏற்றுவது போல இறை சக்தியை ஏற்றச் செய்யும்.

பிரகாரத்தை நாம் எந்த நேரத்தில் வலம் வருகிறோமோ அதற்கு ஏற்ப பலன்கள் கிடைக்கும். காலையில் பிரகாரங்களைச் சுற்றினால் நோய்கள் நீங்கி முற்றிலும் குணமாகும்.

மதியம் பிரகார வலம் வந்தால் நமது விருப்பங்கள் எல்லாம் நிறைவேறும். அர்த்த ஜாம பூஜை நடப்பதற்கு முன்பு இரவில் பிரகாரங்களைச் சுற்றி வந்தால் நாம் செய்த பாவங்கள் எல்லாம் பொசுங்கி நீங்கிவிடும்.

சில கோவில்களில் நள்ளிரவிலும் பிரகாரத்தை வலம் வர வாய்ப்பிருக்கும். நள்ளிரவு செய்யப்படும் பிரகார வலம் மோட்சத்தைப் பெற்றுத்தரும் என்று நம்பப்படுகிறது. இதில் உட்பிரகாரத்தில் செய்யப்படும் பிரதட்சணம் மும்முடங்கு பலன் தரும்.

ஆலய பிரதட்சணத்தை பொதுவாக அடிப்பிரதட்சணம், அங்கப்பிரதட்சணம், ஆத்மப் பிரதட்சணம் என்று மூன்று வகையாகச் சொல்வார்கள். அடிமேல் அடி வைத்து பிரதட்சணம் செய்வது அடிப்பிரதட்சணமாகும். இதை ஆண், பெண் இருபாலாரும் செய்யலாம்.

அங்கப் பிரதட்சணம் என்பது நமது தலை முதல் கால் வரை படும்படி படுத்து உருண்டு பிரதட்சணம் செய்வதாகும். பொதுவாக ஆண்கள் மட்டுமே அங்கப்பிரதட்சணம் செய்ய வேண்டும் என்கிறார்கள்.

பெண்கள் அங்கப் பிரதட்சணம் செய்யக்கூடாது என்று புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தற்போது பெரும்பாலும் அங்கப்பிரதட்சணம் செய்வது பெண்கள் தான்.

காலம்காலமாக எத்தனையோ மகான்கள், ஞானிகள் கோவிலை வலம் வந்து மோட்சம் பெற்றிருப்பார்கள். அவர்களது பாத துளி பட்ட பிரகாரங்களில் அங்கப்பிரதட்சணம் செய்பவர்களது உடல் முழுவதும் படுவதால் அவர்களது பாவங்கள் சம்கரிக்கப்பட்டு விடும்.

ஆத்ம பிரதட்சணம் என்பது மனதுக்குள் செய்யும் பிரதட்சண வழிபாடாகும். இந்தப் பிரதட்சண முறைகள் மனதைப் பக்குவப்படுத்தும் அளவுக்கு உடம்பையும் ஆரோக்கியப்படுத்துவதில் முக்கிய இடம் வகிக்கிறது.

நமது உடல் உள்உறுப்புகள் பல முடிச்சுகள் கொண்டது. இந்த முடிச்சுகள் நமது பாதங்களில் புள்ளிகளாக இருக்கின்றன. இந்தப் புள்ளிகள் ஒவ்வொன்றும் அழுத்தப்படும்போது அந்தப் புள்ளிக்குரிய முடிச்சுகள் கொண்ட உள்உறுப்புகள் சரியான முறையில் இயங்கும்.

கோவில்களில் பிரகாரங்களை வலம் வரும்போதுதான் நம் பாதங்களில் உள்ள எல்லாப் புள்ளிகளும் அழுத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது அக்குப்பிரசர் சிகிச்சை மாதிரி இது நடக்கிறது.

பிரகாரங்களில் நடக்கும்போது நமது பாத புள்ளிகள் திறப்பதால் அதன் வழியாக இறை சக்தியான அதிர்வலைகளும் நம் உடம்புக்குள் செல்ல வழிவகை ஏற்படுகிறது. இதன்மூலம் ஆலயத்தில் நிரம்பி இருக்கும் ஆற்றல்கள் அத்தனையையும் நம் உடல் உறிஞ்சிக் கொள்கிறது. இது நமக்குள் புத்துணர்ச்சியை ஏற்படுத்துகிறது. இது அறிவியல் ரீதியாகவும் உண்மை என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

எனவே ஆலயத்துக்குச் செல்லும் போது அவசியம் பிரகாரம் வலம் வர வேண்டும் என்பதை அறுதியான பழக்கமாக மாற்றிக் கொள்ளுங்கள். பிரகாரத்தை வலம்வந்து முடித்து விட்டோம். இனி பிரகாரங்களில் உள்ள சிறு சிறு சந்நதிகள் பற்றி அடுத்துக் காணலாம்.

(முற்றும்)

# செய்தித்துளிகள்

## போதைப்பொருள் கடத்திய படகுடன் நால்வர் கைது

(கொழும்பு)

ஐஸ் போதைப் பொருளை கடத்தி வந்துகொண்டிருந்ததாக நம்பப்படும் றோலர் படகொன்றினை காலி துறைமுகத்தை அண்டிய ஜாகொட்டுவ கடற்பரப்பில் வைத்து கடற்படையினரின் உதவியுடன் பொலிஸ் போதைப் பொருள் தட்டுப்புப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

இதன்போது படகிலிருந்து 4 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஒருவர் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜா எல-திக்கோவிட்ட துறைமுகத்திலிருந்து குறித்த படகு பயணத்தை ஆரம்பித்துள்ள நிலையில் இப்படகு சர்வதேச கடற்பரப்பில் போதைப் பொருளைப் பெற்று திரும்பிக் கொண்டிருந்ததாக கூறப்படும் நிலையில் கடற்படையினரின் உதவியுடன் பொலிஸார் கடலில் வைத்து குறித்த படகை மடக்கிப் பிடித்துள்ளனர். (ஐ-4)

## 173 பேர் கைது

(கொழும்பு)

மதுபோதையில் வாகனங்களை செலுத்திய 173 பேர் நேற்றுடன் நிறைவடைந்த காலப்பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் கடந்த 20 ஆம் திகதி முதல் இதுவரை போக்குவரத்து முறைகேடுகள் சம்பந்தமாக கைது செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 1,571 ஆகும். (ஐ-4)

## 273 பேருந்துகள் சேவைக்கு

(கொழும்பு)

முழுமையாக பழுதடைந்த காரணத்தினால் சேவையில் இருந்து ஒதுக்கப்பட்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான 273 பேருந்துகளை புதுப்பித்து மீண்டும் பயணிகள் போக்குவரத்து சேவையில் இணைக்கும் நிகழ்வு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் காலி முகத்திடலில் இடம்பெற்றது. இந்த பேருந்துகள் நாடு முழுவதும் கிராமப்புற வீதிகளில் பயணிகள் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படவுள்ளன. (ஐ-4)



## தூர இடங்களுக்கான பேருந்துகள் ஓடவில்லை

(கொழும்பு)

தூர இடங்களுக்கான பேருந்து சேவை இன்றிலிருந்து ஆரம்பமாகுமென தெரிவித்திருந்தாலும் குறித்த சேவைகள் உரிய முறையில் ஆரம்பிக்கப்படவில்லை என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றால் தனியார் பேருந்து உரிமையாளர்கள் தமது பயண சேவையை மட்டுப்படுத்தியுள்ளமை காரணமாக சில வீதிகளில் குறைந்தளவு பேருந்துகளே சேவையில் ஈடுபடுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

## 386 பேர் நாட்டிற்கு


(கொழும்பு)

கொரோனாத்தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 386 இலங்கையர்கள் நேற்று நாட்டை வந்தடைந்தனர்.

அழைத்துவரப்பட்டவர்களுள் சென்னையிலிருந்து 283 பேரும் டுபாயிலிருந்து 48 பேரும் கட்டாரிலிருந்து 27 பேரும் இத்தாலியிலிருந்து 28 பேரும் அடங்குவர். (ஐ-4)




## குழப்பவாதிகள்



ஒருமுறை முல்லா ஒரு நண்பரின் திருமணத்திற்கு சென்ற போது பேச்சுவாக்கில் நாட்டில் உள்ள அறிஞர்கள் எல்லாம் குழப்பவாதிகள், எதையுமே உறுதியாக, தீர்மானமாகக் கூற இயலாதவர்கள் என்று சொன்னார்.

அதை அறிந்த முல்லாவின் எதிரிகள் அறிஞர்கள் எல்லாம் குழப்பவாதிகள் என்று சொன்னதை மன்னரிடம் போய்க் கூறினார்கள்.

உண்மையை அறிய விரும்பிய அரசர், முல்லாவைச் சபைக்கு வரவழைத்தார்.

பிறகு முல்லாவை நோக்கி, அறிஞர்கள் எல்லாம் குழப்பவாதிகள் என்று நிரூபித்துக் காட்டுங்கள் என்றார். முல்லா அரசரிடம் என்னால் நிரூபிக்க முடியும் என்றார்.

அனைவரிடமும் ஆளுக்கொரு தாளைக் கொடுத்தார். பின்னர் அவர்களிடம், அறிஞர் பெருமக்களே நான் ஒரே ஒரு கேள்விதான் கேட்கப் போகிறேன்.

அவர்களிடம் அதற்குரிய பதிலை, இந்தத் தாளில் பதில் எழுதிக் கொடுக்க வேண்டும்" என்றார்.

முல்லா, அறிஞர்கள் அனைவரிடமும் ரொட்டி என்றால் என்ன? " என்று கேட்டார். அனைவரும் பதிலைத் தாளில் எழுதி அரசரிடம் கொடுத்தார்கள். அரசர் படிக்க ஆரம்பித்தார்.

ஒருவர்- ரொட்டி என்பது சத்துள்ள பண்டம் என்று எழுதியிருந்தார். இரண்டாமவர் - ரொட்டி என்பது ஒரு உணவு என்று குறிப்பிட்டிருந்தார்.

மூன்றாமவர் - இறைவன் கொடுத்த கொடையே ரொட்டி. நான்காமவர் - ரொட்டி என்பது வேகவைத்த மாவுப் பொருள்.

ஐந்தாமவர் - ரொட்டி என்பது மாவும் நீரும் கலந்த கலப்பு. ஆறாமவர் - அவரவர் விருப்பத்துக்கு ஏற்ப சுவையும் வடிவும் பெறுவது ரொட்டி

ஏழாமவர் - ரொட்டி என்பதற்கு சரியான பொருள் யாருக்குமே தெரியாது என்று குறிப்பிட்டு எழுதியிருந்ததை அரசர் படித்தார். அரசர் படித்து முடிக்கும் வரை பொறுமையுடன் காத்திருந்த முல்லா, " அரசே ! "ரொட்டி என்ற ஒரு சாதாரண கேள்விக்கு, இவர்கள் அனைவரின் பதிலும் ஒன்றுடன் ஒன்று ஒத்துப் போகவில்லை பார்த்தீர்களா?.

இதனால்தான் நம் நாட்டில் உள்ள அறிஞர்கள் குழப்பவாதிகள் என்றேன்" என்றார்.

அரசர் முல்லாவின் அறிவாற்றலை வியந்து அவர்மீது இருந்த குற்றச்சாட்டினைத் தள்ளுபடி செய்தார். அரசவையில் கூடியிருந்த அனைவரும் முல்லாவின் திறமையைப் பாராட்டினார்கள்.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## கலங்க வைத்த கிரானிகஸ் யுத்தம்




மாமன்னர் அலெக்சாண்டர் வாழ்க. வாழ்த்துக் கோஷத்தின் அர்த்தம் அலெக்சாண்டரின் கட்டளையை ஏற்றுக்கொண்டோம் என்பதுதான். ஆனாலும் வீரர்களுக்கு உள்ளுக்குள் ஒரு நடுக்கம்.

ஆற்றின் வேகம், நடுங்கும் குளிர், அடர்ந்த இருள். எல்லாமே ஆற்றைக் கடப்பதற்கு முரணான விடயங்கள். தயங்கினார்கள். வீரர்களின் அச்சத்தைப் புரிந்து கொண்டார் பார்மீனியோ. அனுபவஸ்தர். நேராக அலெக்சாண்டரிம் சென்றார்.

இருள் சூழ்ந்த நிலையில் ஆற்றைக் கடப்பது புத்திசாலித்தனமான விடயம் அல்ல. ஆபத்தை விளைவிக்கும் சங்கதி. நம்முடைய வீரர்களும் அப்படித்தான் நினைக்கிறார்கள். எனக்கு அனுபவம் தந்த பாடமும் அதுதான். அமைதியாக ஓய்வெடுப்போம். விடிந்ததும் ஆற்றைக் கடக்கலாம்.

பார்மீனியோ பேசப் பேச நெருப்பில் பட்ட இறப்பர் போல சுருங்கிக் கொண்டே போனது அலெக்சாண்டரின் முகம். பயமா? மாசிடோனிய வீரர்களுக்குப் பயமா? அதுவும் இருளைக் கண்டு. ஒன்றைச் சொல்கிறேன். பயப்படும் வீரர்களிடம் போய் அதைச் சொல்லுங்கள்.

எப்போதுமே எதிரிகளின் எண்ணிக்கையைப் பார்த்து மிரளக் கூடாது. பிரமிக்கக் கூடாது. தேவையற்ற அச்சம், நடுக்கம் கூடவே கூடாது. அப்படிச் செய்தால் உங்களுக்கு இருக்கும் தன்னம்பிக்கையின் அளவு, தைரியத்தின் வீரியம் உங்களையும் மீறிக் குறையத் தொடங்கிவிடும்.

எவ்வளவு பெரிய படையாக இருந்தாலும் அதற்கென்று ஒரு பலவீனம் இருக்கும். எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத வேகத்தில் பலவீனமான இடத்தில் தாக்கினால் எதிரி நிலைகுலைந்துவிடுவார். நீங்கள் சொல்வதைக் கேட்டால் எனக்கு நகைப்பாக இருக்கிறது. ஹா... ஹா...

அலெக்சாண்டருடைய சிரிப்பு பார்மீனியோவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. என்னைப் பார்த்து கெக்கெலி கொட்டத் தேவையில்லை அலெக்சாண்டர். ஆபத்தை உணர்ந்தேன். சொல்வது கடமை. சொல்லிவிட்டேன். இனி உன் பாடு. உன் படைகள் பாடு.

நான் இருக்கும் போது உயிர் பயம் தேவையில்லை. நான் வழிநடத்துகிறேன் வாருங்கள் புறப்படலாம். (தொடரும்)

தேவையில்லாதபோது வாயை மூடிக்கொள்ளுங்கள்.
சரியான சந்தர்ப்பம் வந்தால் சொல்லுங்கள்.
சொல்வதை தீப்பொறி எழச் சொல்லுங்கள்.
– பெஞ்சமின் ஃபிராங்க்லின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரச உத்தியோகத்தர்களே! இன்னொரு சத்தியம் செய்யுங்கள்

2021ஆம் ஆண்டு மலர்ந்த நேற்றைய தினத்தில் அரச உத்தியோகத்தர்கள் அனைவரும் சத்தியப் பிரமாணம் செய்து தமது கடமைகளை ஆரம்பித்தனர்.

ஆண்டுத் தொடக்கத்தில் சத்தியப்பிரமாணம் செய்து கடமையை ஆரம்பிக்கின்ற நடைமுறை இந்தியாவில் நீண்டகாலமாக வழக்கத்தில் உள்ளது.

இலங்கையில் கடந்த சில வருடங்களாகச் சத்தியப்பிரமாணம் செய்து கடமைகளை ஆரம்பிப்பது நடைமுறைக்கு வந்துள்ளது.

பொதுவில் அரசியல் பதவிகளுக்காக சத்தியப்பிரமாணம் செய்கின்ற வழமை இருந்த போதிலும் தற்போது அரச உத்தியோகத்தர்களும் வருடத் தொடக்கத்தில் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற நடைமுறை நல்லதொரு விடயமாகும்.

பொதுவில் சத்தியப் பிரமாணம் செய்கின்றபோது, கடவுள் அறிய.. என்ற சொற்பதத்தைப் பயன்படுத்துவது சத்தியப் பிரமாணத்தை மேலும் கனதியாக்கும்.

தமிழகத்தில் முதலமைச்சர், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் செய்யும்போது, கடவுள் அறிய என்ற சொற்பதத்தை பயன்படுத்திக் கொள்வர்.

நாமும் கடவுள் அறிய என்று சத்தியப் பிரமாணம் செய்யும்போது, அந்த சத்தியத்தை முடிந்தளவில் பின்பற்ற வேண்டும் என்ற மன உறுத்தல் இருக்கும் என்பதால், கடவுள் அறிய என்ற சொற்பதத்தைச் சத்தியப் பிரமாணத்தில் உள்ளடக்கிக் கொள்வது உசிதமானது.

இவை ஒருபுறமிருக்க, நேற்றைய தினம் அரச உத்தியோகத்தர்கள் தங்கள் திணைக்களத் தலைவர்களுடன் சேர்ந்து, அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சத்தியக்கூற்றை வாசித்து உறுதிப் பிரமாணம் செய்தனர்.

இந்த நடைமுறையை அனுசரிக்கின்ற அதேநேரம், தமிழ் அரச உத்தியோத்தர்கள் இன்னொரு சத்தியத்தை மனம் வாக்குக் காயம் எனும் திரிகரண சுத்தியோடு செய்தாக வேண்டும்.

அந்தச் சத்தியப் பிரமாணமானது;

தமிழ் இனத்துக்கு எதிராகச் செய்யப்படுகின்ற எந்த அநீதிக்கும் உடன்பட மாட்டேன். தமிழ் மக்களின் காணிகளை கபளீகரம் செய்கின்ற அடாவடித்தனத்துக்கு இம்மியும் இணங்க மாட்டேன்.

சிறுபான்மை இனம் என்ற ஒரே காரணத்துக்காக தமிழ் மக்களுக்கு யார் அநீதி இழைத்தாலும் அதற்கு உடந்தையாக இருக்க மாட்டேன்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட – தங்கள் உறவுகளை இழந்த மக்களை ஆற்றுப்படுத்தவும் அந்த மக்களின் வாழ்வியலை வளமாக்கவும் வறிய மக்களுக்கு கிடைக்கக்கூடிய அத்தனை கிடைப்பனவுகளையும் பெற்றுக் கொடுக்கவும் என்னாலான அத்தனை முயற்சிகளையும் உச்சமாகச் செய்வேன்.

தமிழ் மக்களின் தொல்லியல் சான்றுகளைப் பாதுகாக்கப் பாடுபடுவேன் என்பதைக் கடவுள் சாட்சியாகச் சத்தியம் செய்து கொள்கிறேன்.

இவ்வாறு இன்னொரு சத்தியப் பிரமாணம் எடுப்போம்.

## கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு 23 வயது இளைஞன் கொலை

(கொழும்பு)

கொஸ்கொட பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளைஞர் ஒரு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கொஸ்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பியகம பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9.45 மணியளவில் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

உயிரிழந்த இளைஞனுக்கும் வேறு நபருக்குமிடையில் முறுகல் நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், பின்னர் குறித்த நபர் இளைஞரை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.

இதன்போது, படுகாயமடைந்த இளைஞன் பலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பியகம பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேக நபரை கைது செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

## சங்கடஹர சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

மாலை 4 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூசை, வசந்த மண்டப பூசை என்பன நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வருவார். (ம-3)

## தனிநபர் வருமானத்துக்கான வரி அறவீட்டில் திருத்தம்

(கொழும்பு)

2021ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட சில வரிகள் நேற்று முதல் அமுலாகியுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

தனிப்பட்ட நபர்களின் வருமானம் தொடர்பிலான வரி நேற்று முதல் அமுலாகியுள்ளது.

கடந்த காலங்களில் தனி நபரின் வருமானம் ஒரு இலட்சம் ரூபாவாக இருந்தால் வரி அறவீடு செய்யப்பட்டது. தற்பொழுது இந்த வருமான எல்லை இரண்டரை இலட்சம் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

இதேவேளை, சேமிப்பு வைப்புக்கள் தொடர்பில் அறவீடு செய்யப்பட்டு வந்த 5 வீத வரி நேற்றுடன் இரத்தாகின்றது.

பெறுமதி சேர் வரி தொடர்பிலான வரவு - செலவுத்திட்ட யோசனையும் நேற்று முதல் அமுலாகின்றது என நிதி அமைச்சு அறிவித்துள்ளது. (ம-3)

## சிரமதான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னதாக பாடசாலையினை முழுமையாக சுத்திகரிப்பு செய்வது என தீர்மானிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் பாடசாலை சுத்திகரிப்பு தொடர்பாக நாளை காலை 9.00 மணி முதல் பாடசாலை சமூகம் இணைந்து சிரமதான நடவடிக்கையினை மேற்கொள்ளவுள்ளது.

எனவே குறித்த தினத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ம-3)

### உத்தியோகபூர்வமாக விமான நிலையம்
## இம்மாதம் திறக்கப்படும்

சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளுக்கமைய இம்மாதத்தில் விமான நிலையத்தை சுற்றுலா பிரயாணிகளுக்காக உத்தியோகபூர்வமாக திறக்க அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளது. விமான நிலையத்தை திறக்கும் திகதி விரைவில் அறிவிக்கப்படும் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கத்தினருக்கும் சுற்றுலாத்துறை அமைச்சருக்கும் இடையிலான பேச்சுவார்த்தை சுற்றுலாத்துறை அமைச்சில் இடம்பெற்றது. இதன்போது கருத்துரைக்கையில் அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 03 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** வில்லூன்றி, நாவாந்துறை, முத்தமிழ் வீதி, மீனாட்சிபுரம், பண்ணை சுற்றுவட்ட வீதி, கண்ணகிபுரம், துரையப்பா விளையாட்டரங்கு பொலிஸ் நிலையம், சிறைச்சாலை, வட மாகாண சுகாதார திணைக்களம், அரசடியிலிருந்து நாவலடி வரை, கொடிகாமம் சந்தியிலிருந்து வறணி வரை, அல்லாரையிலிருந்து பாலாவி வரை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



### பழக்கமே ஒழுக்கம் தரும்

❖ கடவுளிடம் உறுதியாகவும், தூய்மையாகவும், நம்பிக்கை உடையவனாகவும் இருந்தால் வாழ்க்கையில் ஏற்படும் அனைத்துவிதமான இடைஞ்சல்களும் மறைந்து போகும்.

❖ ஒழுக்கம் மீண்டும் மீண்டும் செய்யப்படும் பழக்கத்தால் உருவாகிறது. பழக்கங்களால் தான் ஒழுக்கத்தை மேலும் சிறந்ததாகச் சீர்படுத்தி அமைக்க முடியும்.

❖ அனைத்துவிதமான அறிவும் மனிதனுக்குள் இருப்பதாக வேதாந்தம் கூறுகிறது. குறிப்பாக, சிறுவனிடமும் இருக்கிற அறிவையும் விழித்து எழும்படி செய்வது தான் ஆசிரியனுடைய கடமை.

❖ நம்மிடமுள்ள தெய்வீக இயல்பை வெளிப்படுத்துவதற்கான ஒரே வழி, மற்றவர்கள் தங்கள் தெய்வீக இயல்பை வெளிப்படுத்தும்படி செய்யும் வகையில் அவர்களுக்கு உதவுவது.

❖ நல்லவர்கள் மற்றவர்களின் நன்மைக்காக மட்டும் வாழ்கிறார்கள், மற்றவர்களின் நன்மைக்காக அறிஞன் தன்னைத்தானே தியாகம் செய்ய வேண்டும். உனக்கு நான் நன்மை செய்வதன் மூலமாகத்தான் என்னுடைய நன்மையை நான் பெற முடியும். இதைத் தவிர வேறு வழியில்லை என்பதை அனைவரும் உணரவேண்டும்.

# சனிப் பெயர்ச்சி பலன்கள்



## 27.12.2020 முதல் 20.12.2023 வரை

### விருச்சிக இராசி வாசகர்களே!

இதுவரை உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான், 26.12.2020 அன்று முன்னேற்றத்தைக் கொடுக்கும் மூன்றாமிடத்திற்கு செல்கின்றார். இப்பொழுது ஏழரைச்சனி விலகி விட்டது. எனவே இனி, தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். துணையாக இருக்கும் நண்பர்களும் உறவினர்களும் தோள்கொடுத்து உதவுவர். தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும். உங்கள் இராசிக்கு 3, 4 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. வெற்றிகள் ஸ்தானம் மற்றும் சுக ஸ்தானத்திற்கு அதிபதியான சனிபகவான், இப்பொழுது வெற்றிகள் ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம் தான். உங்களின் நீண்டநாள் எண்ணங்கள் நிறைவேறும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள்.

மகர இராசியில், ஏற்கனவே நீச்சம் பெற்ற குரு பகவான் சஞ்சரிக்கின்றார். குரு உங்கள் இராசிக்கு, தன -பஞ்சமாதிபதியாக விளங்குபவர். அவரோடு இப்பொழுது சனிபகவான் இணைந்து 'நீச்சபங்க இராஜயோக'த்தை உருவாக்குகின்றார். எனவே மனம்போல மங்கல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். செல்வச் செழிப்போடு கூடிய வாழ்க்கை மலரப்போகிறது.

# ஏழரைச்சனி விலகியது, இனிய வாழ்க்கை மலர்கிறது!

# ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

### வாய்ப்புகள் வாசல் தேடி வரும்

டிசெம்பர் 26 ஆம் திகதி முதல் உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகும் சனி, முன்னேற்றத்தின் முதல்படிக்கு செல்ல வைக்கப்போகிறார். இதுவரை ஏற்பட்ட தடைகளும் தாமதங்களும் அகலும். தனவரவு அதிகரிக்கும். வாழ்க்கைத் தேவை ஒவ்வொன்றாகப் பூர்த்தியாகும். எதிரிகள் விலகுவர். சகோதர ஒற்றுமை பலப்படும். பிரபலமானவர்களின் ஒத்துழைப்புடன் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணி புரிவீர்கள். அரசியல் மற்றும் பொது நலத்தில் இருப்பவர்களுக்கு பதவி வாய்ப்புகள் தேடி வரும். உத்தியோகத்தில் உள்ளவர்களின் திறமைக்கு அங்கீகாரம் கிடைத்து உயர்பதவிகளும் சம்பள உயர்வும் கிடைக்கும்.

### சனியின் பார்வை பலன்கள்

உங்கள் இராசிக்கு மூன்றாம் இடத்தில் சஞ்சரிக்கும் சனிபகவானின் பார்வை, 5, 9, 12 ஆகிய மூன்று இடங்களில் பதிகின்றது. சகாய ஸ்தானத்தில் வீற்றிருந்து பூர்வ புண்ணிய ஸ்தானம், புத்திர ஸ்தானம், பாக்கிய ஸ்தானம், பயண ஸ்தானம் ஆகியவற்றைச் சனி பார்க்கிறார். பூர்வ புண்ணியத்தின் பலனாக உங்களுக்கு என்ன என்னவெல்லாம் கிடைக்க வேண்டுமோ, அவை அனைத்தும் கிடைத்து நிறைவான வாழ்க்கை உருவாகப் போகின்றது. குறிப்பாக திருமண முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். துள்ளி விளையாடும் பிள்ளைச் செல்வம் கிடைப்பதற்கான அறிகுறி தென்படும். புதிய சொத்துக்களின் சேர்க்கையும், வீடுகட்டிக் குடியேறும் அமைப்பும் மனம் போல நடைபெறும்.

சனியின் பார்வை 9 ஆம் இடத்தில் பதிவதால், பெற்றோர் வழியில் பிரியம் கூடும்.

சனியின் பார்வை 12 ஆம் இடத்தில் பதிவதால், சுப விரயம் ஏற்படும். பூர்வீக சொத்துக்களில் ஒரு பகுதியைக் கொடுத்துவிட்டுப் புதிய சொத்துக்களை வாங்கும் யோகம் உண்டு.

விரும்பிய வண்ணம் வந்து சேரும். நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த பதவி உயர்வுகள் இப்பொழுது கிடைக்கும். குடும்பத்தை விட்டுப்பிரிந்து வேலை பார்த்து வந்தவர்கள், இனி ஒன்றுசேரும் வாய்ப்பு உண்டு. இக்காலத்தில் கும்ப இராசிக்கு சனி செல்கின்றார். அர்த்தாஷ்டமச் சனியாக சனி பகவான் வந்தாலும், கும்ப இராசி அவருக்கு சொந்த வீடு என்பதால் நன்மைகளையே வழங்குவார். சொல்லும் சொற்கள் எல்லாம் வெல்லும் சொற்களாக மாறும். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும்.

### குருப்பெயர்ச்சிக் காலம்

சனிப்பெயர்ச்சி காலத்தில் மூன்று முறை குருப்பெயர்ச்சி வருகின்றது. கும்பத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அதன் பார்வை தொழில் ஸ்தானத்தில் பதிவதால் தொழில் வெற்றி நடைபோடும்.

வருமானம் திருப்தி தரும். மீனத்தில் குரு வரும்பொழுது, உங்கள் இராசியையே பார்க்கப் போகின்றார். எனவே ஆரோக்கியம் சீராகும். அனைத்து இணக்கம் ஏற்படும்.

### வெற்றி பெற வைக்கும் வழிபாடு

சதுர்த்தி விரதமிருந்து ஆனைமுகப் பெருமானை வழிபடுவதோடு, சஷ்டி அன்று முருகப்பெருமானையும் வழிபட்டு வாருங்கள். இல்லத்து பூஜை அறையில் வராகி படம் வைத்து, வராகி கவசம் பாடி வழிபட்டால் வசதி வாய்ப்புகள் பெருகும். வளர்ச்சியும் அதிகரிக்கும்.

### சனியின் வக்கிர காலம்

12.05.2021 முதல் 26.09.2021 வரை, 25.05.2022 முதல் 09.10.2022 வரை, 27.06.2023 முதல் 23.10.2023 வரை என மூன்று முறை சனி வக்கிரம் அடைகின்றார்.

இக்காலத்தில் நன்மையும், தீமையும் கலந்தே நடைபெறும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்ளமாட்டார்கள். எவ்வளவுதான் நன்மை செய்தாலும் குடும்பத்தினர் குறைகூறிக்கொண்டே இருப்பர். விரயங்கள் அதிகரிக்கும். அலைச்சலைக் குறைத்துக்கொள்ளுங்கள். ஒப்பந்தங்களில் கையெழுத்திடும்போது, யோசித்து செயற்படுங்கள்.

### சனியின் பாதசாரப் பலன்கள்

27.12.2020 முதல் 27.12.2021 வரை: சூரியன் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, அற்புதமான பலன்கள் வந்து சேரும். உங்கள் இராசிக்கு தொழில் ஸ்தானாதிபதியாக சூரியன் விளங்குவ




தால் புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும். அடுக்கடுக்காக ஒப்பந்தங்கள் வந்து அலைமோதும்.

28.12.2021 முதல் 26.01.2023 வரை: சந்திரன் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, பூர்வீகச் சொத்துக்கள் கைக்கு கிடைத்து மகிழ்ச்சி காண்பீர்கள். அதுமட்டுமல்லாமல் புதிதாக வீடு கட்ட வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும்.

27.01.2023 முதல் 19.12.2023 வரை: செவ்வாய் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, செய்யும் தொழில் சீராக இருக்கும். செல்வாக்கு அதிகரிக்கும். வியாபாரப் போட்டிகள் அகலும். வீடு மாற்றங்களும் உத்தியோக மாற்றங்களும் முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். மேஷத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, கொஞ்சம் விரயங்கள் ஏற்படலாம். குடும்பத்தில் உள்ளவர்களின் அனுசரிப்பு குறையும். கொடுத்த கடன்களால் பிரச்சினைகள் ஏற்படும்.

### ராகு-கேது பெயர்ச்சிக்காலம்

21.03.2022 இல் நடைபெறும் ராகு-கேது பெயர்ச்சியின் போது, மேஷத்தில் இராகுவும் துலாத்தில் கேதுவும் சஞ்சரிப்பார்கள். இந்த காலகட்டத்தில் புதிய பாதை புலப்படும். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். வழக்கமான பணிகளில் ஏற்பட்ட சுணக்கம் அகலும்.

12 இல் கேது சஞ்சரிப்பதால் ஆலயத் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். வெளிநாட்டில் இருக்கும் உறவினர் மூலம் நல்ல தகவல் வந்து சேரும். வியாபாரத்தில் புதிய கூட்டாளிகள் வந்திணைவர்.

08.10.2023 இல் நடைபெறும் ராகு-கேது பெயர்ச்சியின் போது, மீனத்தில் ராகுவும் கன்னியில் கேதுவும் சஞ்சரிப்பார்கள். இந்தக் காலகட்டத்தில் பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. இலாப ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால் பாக்கிகள் வசூலாகிப் பரவசப்படுத்தும். ஆன்மிகத்திற்கு என்று அதிக தொகையைச் செலவிடுவீர்கள். இளைய சகோதரத்தோடு



### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

பெண்களுக்கு இந்த சனிப்பெயர்ச்சி சாதகமான பெயர்ச்சியாகவே இருக்கின்றது. ஏழரைச்சனி விலகி விட்டதால் இனி இல்லம் தேடி நல்ல தகவல்கள் வந்துசேரும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

பொருளாதார நிலை உயரும். ஆரோக்கியம் சீராகும். ஆதாயம் தரும் தகவல்கள் அதிகரிக்கும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதியும் கல்யாண முயற்சி கருதியும் நீங்கள் எடுத்த செயல்களில் வெற்றி கிடைக்கும்.

பணிபுரியும் பெண்களுக்கு, உத்தியோக உயர்வும் ஊதிய உயர்வும் உண்டு. தாய் மற்றும் உடன்பிறப்புகள் உங்களுக்கு உறுதுணையாக இருந்து குடும்ப முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொடுப்பர். (தொடரும்)

## கொரோனாவுக்கு...

பேர் உயிரிழந்துள்ளனர்.

புத்தாண்டு தினமான நேற்று இவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம் இலங்கையில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 208 ஆக அதிகரித்துள்ளது.

ஆலையடிவேம்பு பகுதியில் உள்ள 67 வயதுடைய ஆண் ஒருவரும் கொழும்பு - 14இல் வசிக்கும் 91 வயதுடைய பெண் மணியும் அகலவத்தை பகுதியில் வசிக்கும் 65 வயதுடைய ஆண் ஒருவரும் தர்கா நகரில்வசிக்கும்63 வயதுடைய ஆண் ஒருவருமே உயிரிழந்துள்ளனர். (ம-3)

## சிசு படுகொலை...

யில் அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த குழந்தை உயிரிழந்தே பிறந்ததாகவும் அதனால் குழந்தையை தாம் புதைத்ததாகவும் அவர்கள் முன்னர் வாக்குமூலம் வழங்கியிருந்தனர்.

திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார், சட்டவைத்திய அதிகாரி மயூரன் ஆகியோர் மேற்கொண்ட பரிசோதனை மற்றும் விசாரணையின் அடிப்படையில் குழந்தையின் முகத்தை துணியால் மூடி மூச்சுத்திணற வைத்து கொலை செய்ததை குழந்தையின் தாயும், தாயின் தாயும் ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியிருக்கின்றனர்.

தானே குழந்தையை கொன்றதாக குழந்தையின் பேர்த்தியார் (தாயின் தாய்) வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## யாழில் வாள்...

காயமடைந்த இளைஞன் ஒருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தென்மராட்சி, விடத்தற்பளை பகுதியில் நேற்று அதிகாலை இந்த பரபரப்பு சம்பவம் நடைபெற்றது.

கறுப்பு நிற துணிகளால் முகத்தை மூடிக்கட்டி, வாள்களுடன் கொள்ளையர் கும்பலொன்று விடத்தற்பளையிலுள்ள வீடொன்றிற்குள் நுழைந்துள்ளது.

எனினும், எச்சரிக்கையடைந்த வீட்டுக்காரர்கள் கத்திக் கூச்சலிட அயல்வீட்டினர் அங்கு சென்றுள்ளனர். அயலவர்கள் வருவதையடுத்து கொள்ளையர்கள் தப்பியோட முயன்றனர். திருடன் ஒருவனை, அயல்வீட்டு இளைஞன் பிடிக்க முற்பட்ட போது, அவர் மீது திருடர்கள் வாள்வெட்டு நடத்தினர்.

இதில் விடத்தற்பளையைச் சேர்ந்த சிவராசா நிரோசன் (வயது-28) என்பவர் காயமடைந்தார்.

இதைத் தொடர்ந்து மேலும் பலர் கூடி திருடர்களை விரட்ட தொடங்கினர். இந்த பரபரப்பையறிந்து இராணுவத்தினரும் களமிறங்கி திருடர்களை வளைத்தனர்.

பொதுமக்கள், இராணுவம் இணைந்து இரண்டு திருடர்களை மடக்கிப் பிடித்தனர்.

மடக்கிப்பிடிக்கப்பட்ட திருடர்கள் பொது மக்களால் தாக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (ம-3)

## தெல்லிப்பழையில்...

தார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த இருவரே தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று 240 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையிலேயே குறித்த இருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றும் ஒருவர் 14 வயதுடைய சிறுமி என்றும் மற்றையவர் 27 வயதுடைய இளைஞர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தலில் 14 நாட்கள் இருந்த இவர்களுக்கு தனிமைப்படுத்தல் நிறைவு பெறும்போது மேற்கொள்ளப்படும் இரண்டாம் சுற்று பரிசோதனையிலேயே அடையாளம் காணப்பட்டனர் என்றும் தெரிவித்தார். (ம-3,18)

## தமிழ் அரசியல்...

டத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்படவுள்ளது.

குறித்த போராட்டத்தில் அரசியல் கைதிகளின் விடுவிப்பில் அக்கறையுள்ள அனைத்துத் தரப்பினரும் கலந்து கொண்டு போராட்டத்தை வலுவூட்டுமாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் வன்னி மாவட்டங்களின் செயலாளர் என்.பிரதீபன் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-3,18)

## தடுப்பூசிகள்...

மீட்டெடுக்கும் என்கின்ற நம்பிக்கை பிறந்திருக்கின்றது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்தில் நேற்று இடம்பெற்ற புத்தாண்டு தின அரச உத்தியோகத்தர்களின் உறுதி உரை எடுக்கும் நிகழ்வில் சிறப்பு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒரு நாட்டில் கொரோனா தொற்று பரம்பலை முற்றாக நிறுத்த வேண்டுமாயின் அந்த நாட்டு சனத்தொகையின் 70 சதவீதமான மக்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட வேண்டும்.

இந்த இலக்கை அடைந்தால்தான் உலகம் முழுவதும் இந்த தொற்றின் பரம்பலைக் கட்டுப்படுத்தலாம். அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பது இன்னமும் உறுதியாகக் கூற முடியாதுள்ளது. எனவே அதுவரை யாருக்கும் எங்கும் இத்தொற்று ஏற்பட வாய்ப்புண்டு என்பதே இன்றைய நிதர்சனம்" என்றார். (ம-3,33)

## +555...

856 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து நேற்று 826 பேர் வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில் இதுவரை 36 ஆயிரத்து 155 பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

இன்னும், ஏழாயிரத்து 497 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-3)

## கொரோனா...

தினமும் 5 இலட்சம் முகக் கவசங்கள் இலங்கையில் பயன்படுத்தப்படும் அதே வேளை, பெருமளவு முகக் கவசங்கள் தினமும் வீசப்படுவதாகவும் கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. (ம-3)

## இராணுவம்...

டோம். இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலர் மேஜர் கமால் குணரத்ன கூளுரைத்தார். இராணுவத்தினருக்கு எதிராக அடுத்து வரும் காலப் பகுதியில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படலாம். இதற்கு சில அரசியல் கட்சிகளும்தயாராகிவருகின்றனவே என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரை மையப்படுத்தியே மேற்படி கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த பாதுகாப்பு செயலர் 2009 ஆம் ஆண்டுமுதல் எமது இராணுவத்துக்கு எதிராக இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

நாம் படுகொலைகளில் ஈடுபட்ட இராணுவம் கிடையாது. போர்க் குற்றங்களையும் இழைக்கவில்லை. மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவமாகும். எமக்கு எந்தவொரு அச்சமும் இல்லை என்றார். (ம-3)

## சங்கிலி...

டம் தங்க சங்கிலியை அறுத்து தப்பிச் சென்ற நபர் வவுனியா குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை வவுனியா வைரவபுளியங்குளம் குளக்கட்டு அருகே சென்று கொண்டிருந்த பெண்ணின் கழுத்தில் அணிந்திருந்த தங்க சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அறுத்துத் தப்பிச் சென்றுள்ளனர்.

இதைத் தொடர்ந்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று செய்யப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் வவுனியா குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவு தலைமை அதிகாரி பிரதீப் தலைமையில் நடத்தப்பட்ட விசாரணையில், சங்கிலியை அறுத்துச் சென்ற சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவர் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிள் மற்றும் அறுக்கப்பட்ட ஒன்றரைப் பவுண் சங்கிலியும் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் வவுனியா குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (ம-3,299)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

மெகா பவர்
திகதி 01/01/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0721
G 03 01 33 37 72

சுபிரி வாசனா
2021/01/01 1562
08 29 31 39 53

மஹஜன சம்பத
திகதி 2021/01/01
சீட்டிழுப்பு இலக்கம் 4354
L 3 7 7 3 3 1

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 01.01.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2649
X 07 43 57 58

தன நிதானய
திகதி - 2021.01.01
சீட்டிழுப்பு இலக்கம் - 391
W 13 40 57 68

அத கோடிபதி
கிழமை: வெள்ளி
சீட்டிழுப்பு இல: 1150
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 01.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 95,114,080
06 60 66 75 W

சனிதா
கிழமை: வெள்ளி
சீட்டிழுப்பு இல: 3480
வர்ணம்: செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 01.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 38,477,307
30 34 47 74 A

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,861,965/=
திகதி: 01.01.2021
வெற்றி வாரம்: 3031
வர்ணம்: கடும் நீலம்
கும்பம்
04 19 29 46
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,940,240

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1324
நிறம் இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 01/01/2021
தினம் வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் 60,937,206
L 21 50 51 73

ஜய ஜய
671
பச்சை
01.01 2021
வெள்ளி
T 23 24 71 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,077,045
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

## வேலையாள் தேவை

கிளிநொச்சியில் கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருக்கும் வீடு, காணியை பராமரிக்கக்கூடிய ஒருவர் தங்கி நின்று வேலை செய்வதற்கு தேவை.

வயது 40–60 இற்கு இடைப்பட்டவர்.

தேசிய அடையாள அட்டை, கிராம சேவையாளரின் அத்தாட்சி கடிதமும் தேவை. (C-1075)

**077 190 3165**

## தேவை

செங்கரும்பு, இஞ்சி இலை, மஞ்சள் இலை, சுண்டங்காய் மொத்தமாக கொள்வனவு செய்யப்படும்.

[ இருப்பில் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். ] (C-1030)

**077 457 8852**

## புதிய கல்வி ஆண்டிற்கான வகுப்புக்கள் ஆரம்பம் !!!

தரம் 06 முதல் O/L வரை

### ஆங்கில மொழி மற்றும் ஆங்கில இலக்கியம்

**ஆசிரியர்: பா.கமலதாசன்**

(Registered Lecturer of Chartered Accountants of Sri Lanka)
B Com Spl. in Acc. (Sri Lanka),
PG Dip in Per. Mgt. & Ind. Rel. (India),
PG Dip in Mgt. (Sri Lanka),
Master Degree in Int. Dev. & Coop. (South Korea),
General English (British Council, Sri Lanka),
Dip in Sinhala (Slida - Sri Lanka),
Dip in Info. Tech. (Mayon - Sri Lanka).

**2021.01.02 ஆம் திகதியில் இருந்து ZOOM செயலி மூலம்**

(நேரடி வகுப்பு – அரச அனுமதிக்குப் பின்பு)

### எங்களுடன் மாணவர்கள் இணையக் காரணங்கள்...

- மாணவர்கள் மீது தனிப்பட்ட கவனம்
- வாராந்தம் worksheet வழங்கல்
- மாதாந்த பரீட்சை இடம்பெறல்
- அதிக புள்ளிகள் பெறுவதற்கான வழிகாட்டல்கள்

(5146)

பதிவுகளுக்கு அழையுங்கள் : 077 777 88 23
நேரடி வகுப்புக்கள் இடம்பெறவுள்ள இடங்கள்
கொக்குவில் - மல்லாகம்

**Aspirant Institute of Education (AIE),**
12/1, Nanthavil Lane, Kokuvil East, Kokuvil, Jaffna.

“ கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார், நீ கீழாகாமல் மேலாவாய் ”
(உபாகமம் 28 : 14)

## 60 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



Best Wishes

இன்று (02.01.2021) 60 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் எங்கள் தந்தை

**Rev. இராசையா கணேசமூர்த்தி**
(Rev. Jacob)


அவர்களை இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் மனதார வாழ்த்துகின்றோம்.

இல. 36,
செல்லர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்
மனைவி,
பிள்ளைகள்.

(5148)


## மரண அறிவித்தல்



### பிரான்சிஸ் வின்சன்டீப்போல்

பிறப்பு 03.04.1938 — இறப்பு 01.01.2021

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் வின்சன் டீப்போல் நேற்று (01.01.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பிரான்சிஸ் - பெர்னடேத் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கஸ்மீர் - றோசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பிலோமினாவின் அன்புக் கணவரும் அலோசியஸ், றோசாளி, அல்போன்ஸ், எட்வேட், நெல்சன், சுசிலா, மரிஸ்ரெல்லா ஆகியோரின் மூத்த சகோதரனும் அலெக்ஸ்போல், லூயிஸ்போல், றொபேட்போல், ஜேக்கப்போல், பீற்றர்போல், எட்மன்போல், றெக்ஸ்போல், டக்ளஸ்போல், மேரிடிலாந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆனந்தி, சுதர்சினி, வசந்தி, நிறஞ்சனா, சிந்துஜா, றோகினி, ராஜி, கிறிஸ்ரியன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் றைஷன்போல், றொயிஸ்ரன், றைஷா, லீசா, பிறின்ஷா, றொக்சி, றெக்ஷன்போல், சின்சியா, றனுஷன்போல், பிறின்சி, றெவின்போல், மேரிடிசானி, சுஜேபோல், மேரிதொம்சியா, பிறினிடா, றொக்ஷனா, கிறிஸ்ரிகா ஆகியோரின் அன்புப் பேரனும் றொமேறோவின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.01.2021) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் வீட்டில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 2.30 மணிக்கு புனித தோமையார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டு கோரியடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (5142)

றோஸ்கோட்,
கடற்கரை வீதி, பருத்தித்துறை.
077 247 9894
077 758 8224
தகவல்:-
குடும்பத்தினர்


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பலாலி வீதி, கோண்டாவில் சந்தியில் இருந்து இருபாலை வீதியில் 7 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.**

[ பழனி ஆண்டவர் கோவில் முன்பாக ] (5137)

(தரகர் தேவையில்லை)

**077 288 0152**
**077 505 8561**
**074 075 4204**

## காணி தேவை

யாழ்ப்பாணம், நல்லூர், மானிப்பாய், கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இடங்களுக்குள் 10 பரப்பு தொடக்கம் 30 பரப்பு வரையான காணிகள் தேவை. (தரகர் தேவையில்லை) (5137)

**076 221 2037**

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-1051)

**0768226240** DHL

## MTC ONLINE வகுப்புக்கள் ஆரம்பம்!

GROUP AND PERSONAL CLASS

**பழனியாண்டவர் கோவிலடி, கோண்டாவில் கிழக்கு.**

தரம் 6 – 11 வரையான புதிய மாணவர்களை உள்வாங்குதல்.

தரம் 6 இற்கான புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

தரம் 6

ஆரம்பம் : 05.01.2021
(செவ்வாய்க்கிழமை)
நேரம் : பிற்பகல் 3.00 மணி

(வரையறுக்கப்பட்ட மாணவர்களுக்கான அனுமதி)

(5149)

தொடர்பு:- நிர்வாகி **R.MOHAN** 077 045 9855


இப்பத்திரிகை வலம்புரி அன்சோ ஸ்தாபனத்தால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.